உ

மஹாத்துமாக்கள்.

MAHATHMAS.

இஃது
கும்பகோணம்
லோகானுகூலன் பத்திராதிபர்
C. S. இராதாகிருஷ்ணய்யரவர்களால்
இயற்றப்பட்டு, பப்ளிஷ் செய்யப்பட்டது.

மதருஸ் :
...ந்தி அண்டு கம்பேனி,
...அச்சுக்கூடத்தில் ”
...க்கப்பட்டது.
...914

Co... [விலை அணு 4.

Q2wx
N14
180024

காப்பிகள் கிடைக்கக்கூடிய இடங்கள்.

1. C. S. இராதாகிருஷ்ணய்யர்,
மங்களவிலாஸ புக்டெப்போ,
கும்பகோணம்.

2. கார்டியன் பிரஸ்,
20, ஸகிண்டு லயன் பீச்,
மதராஸ்.

3. ஹிக்கின்பாதம்ஸ் லிமிடெட்,
புக்ஸெல்லர்ஸ்,
மவுண்ட்ரோட், மதராஸ்.

4. சுதேசமித்திரன் ஆபீஸ்,
23, யெறபாலுசெட்டித்தெரு,
மதராஸ்.

5. S. மூர்த்தி அண்டு கம்பெனி "கபாலி பிரஸ்,"
305, தம்புசெட்டித் தெரு,
மதராஸ்.

6. P. R. இராமய்யர் அண்டு கம்பெனி,
பிராட்வே, மதராஸ்.

7. ஆனந்தா ஸ்டீம் பிரஸ்,
வேலான்ஸ்குயர், மதராஸ்.

8. வைசியமித்திரன் ஆபீஸ்,
தேவக்கோட்டை.

"The Thathvagyana Bodini."

"Bhakthi Vilakkam"

"Mahathmas."

PREFACE.

These three small Books forming a set are now offered to the public by the Editor of the "Lokanukoolan" Kumbakonam; the 1st of them deals with the essential Principles of Hindu Philosophy on a non-technical basis; the 2nd of them illustrates the abstract principles by reference to the personal Gods and avatars of the Hindu religion; and the last of them deals with the lives of eminent souls who had realised the eternal bliss in their own life. A popular exposition of the essential principles of the Philosophy of Life must be a boon of no ordinary worth especially to those who have no avenues to the knowledge of the Vedantha through the prescribed orthodox mode of initiation. The Editor attempts in the 1st of the series of the book mentioned above, an exposition, to suit the level of ordinary understandings, of the grandest questions of philosophy—The idea of God, the significance of Pranavam, the nature of the soul, the relation between the soul and the body, "Who am I?"—"Whence"—"Whither?"—the miseries of conditioned existence,—and the final goal "Bakthi-Vilakkam" treats at much length of the personal gods, Vinayaka, Subramanya, Siva and others and of avatars like Sri Rama and Sri Krishna, and gives a lucid exposition of the esoteric significance underlying each of them and illustrates concetely the abstract principles of philosophy dealt within the "Thathvagyana Bodhini."

The third of the series the "Mahatmas" deals with the lives of the illustrious Sankar, Bodhendra Swamigal, of Theagaroya Swami of the Keerthana fame, of Ayyaval of Thiruvasanaloore of recent fame, of Sadasiva Brahman the adoit yogi and a host of others of equal celebrity.

The Editors humble aim in offering these books to the public is to familiarize the reading public with the grand truths of our philosophy and enable them to try to *live* consistently therewith and realize the eternal bliss even here. ....
"the place where, in the end.

We find our happiness, or not at all!"

THE AUTHOR.

INTRODUCTION.

This small book contains the lives of a few great men who lived within the last three or four centuries, and whose memories have been passed down by tradition and are treasured in the heart of many a devout Hindu. The saints and sages of this country are legion, and in this land the saint has always been honoured more than the King. The true Hindu has his ideal man in the Sanyasi who has renounced the world and its pleasures, and the Bhaktha who has made the Supreme the one object of his love. The Hindu people know how to honour and admire physical power, material greatness, or intellectual eminence, but they reserve their unbounded reverence and unstinted worship for spiritual greatness alone.

Our land has produced many great men and women in the past, great warriors, great poets, great artists, but the Hindu people cannot boast of a rich Biographical Literature. Poets and artists in India enjoy what contemporary fame they can get, and then their memories live only in their works. Generally speaking, the Hindu genius has not showed a tendency to honour with a biography every man who won some fame or made some noise in his day.

The following narratives are poor in those details which may increase the length of the record but not its interest or value. After all, the only purpose for which the lives of great men are recorded is that they may form an example and an inspiration to future generations. But the life of every great man has many things in common with the life of an ordinary man, and a few things that are not. The really interesting and useful portions of a great man's life are only those points in his life, work or character, which mark him out as superior to the ordinary run of mortals. It is possible to feel an artificial interest even in the ordinary incidents of a great

man's life. But, according to the Hindu view, that a great man was born in a certain place at a certain time, that he ate and slept and grew up to boyhood and manhood, that he had domestic vicissitudes, wrote letters to his friends, and did so many other things of the sort, and died at last, as all men must—all these happen in the course of the life of an ordinary man, and are not the more interesting because they are recounted as forming part of the life of a great man. Without ever knowing the exact minute when Shakespeare was born, or ever having journeyed to Stratford-on-Avon to know where the house in which he lived was situated, one can appreciate the greatness of Shakespeare as a poet and dramatist from a study of his works alone.

The miraculous and the uncommon fill a very large place in the following narratives. Vast numbers of people in all countries and in all ages have believed in the existence of the invisible world and in the exercise of supernatural powers by spiritual men. The great majority of the people of this country believe in the life and doings of the saints as related in the following pages, even as an Englishman believes in the truth of the story related in Boswell's Johnson or Lockhart's Scott. But, however that may be, tradition may be taken to be true in substance though not in detail, and the fact that there lived these great men who strove godwards, and, by their spiritual eminence commanded the admiration and worship of large numbers of their fellow-men, will form a source of inspiration, and be a guide to us in this march of life, the destination of which each of us fixes for himself as we progress onwards from stage to stage in the path of Evolution.

KUMBAKONAM,
30—9—1914.

S. MAHALINGAM AIYAR, B.A., B.L.

முகவுரை.

கதாகாலக்ஷேபங்களைச் சிறப்பித்தல் பீடிகை யெனவும், நூல்களைச் சிறப்பித்தல் முகவுரையெனவும் ஆன்றோர் கூறுவர். ஆயினும், மஹாத்மாக்களின் உற்பத்தியையும், அவர்களது அற்புதச் செயல்களையும், அன்றோர் அடங்கிய விசேஷ வைபவங்களையு முரைக்கும், இதைப்போன்ற அரிய பெரிய நூல்களுக்கு முகவுரை ஒன்று வேண்டுமென்பது அவசியமன்று. ஒருக்கால் அவசியமாயினும், அவை இனிப்புக்கினிப்பை யூட்டியவாறேயொக்கும்.

இவ்வரிய நூலில், ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் ஸ்ரீ தியாகய்யர் என்னும் ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள், ஸ்ரீ சதாசிவ பிரம்மம், ஸ்ரீ ஜகன்னாதபண்டிதகவி, ஸ்ரீ போதேந்திர ஸ்வாமிகள், ஸ்ரீ திருவிசநல்லூர் அய்யாவாள், முதலிய இம்மஹாத்மாக்களின் பிரபாவங்களடங்கியிருக்கின்றன.

இந்நூலை பெரியோர்களின் உதவியால் கிடைக்கப்பெற்று பண்டித பாமரர் எவரும் அறியும்படி இயன்றவளவு எளிய தமிழ் நடையிலேயே எழுதப்பட்டிருக்கின்றன.

இந்நூல் நம்மவருக்குச் சிறிதேனும் நன்மையைப்பயக்குமென்னுங் கருத்தோடு பிரசுரித்து வலியோர் எளியோர் யாரும் மனச்சோர்வின்றி விரும்பத்தக்கவாறு குறைந்த விகிதமாயு மேற்படுத்தியுள்ளோம்.

ஆதலின், இந்நூலில் சொற்குற்றம் பொருட்குற்றமிருக்கினும் அவற்றைக் களைந்து விஷயத்தைக் கிரகிக்க வேண்டுகின்றோம்.

C. S. இராதாகிருஷ்ணய்யர்.

மங்கள விலாஸ புக் டெப்போ,

கும்பகோணம்.

தத்துவஞானபோதினி:—இந்நூல் வேதாந்த சாஸ்திரத்தின் தத்துவங்கள் ஆசார்யபக்தி, ஈஸ்வரபக்தி முதலிய பல அரிய விஷயங்களை ஒருங்கு சேர்த்து ஒருவாறு கோர்வைப்படுத்தி சுருக்கமாகப் பிரசுரிக்கப்பட்டுள்ள இனிமையான ஞானநூல். விலை அணா 8.

பக்திவிளக்கம்:—இந்நூல் ஈஸ்வரனது அவதார விசேஷங்கள் மூர்த்திகளின் மஹிமைகள் ஈஸ்வரனது அடியார்கள், பக்தர்கள், குருபக்தி, ரிஷிகளின் சரிதைகள் சிஷ்யர்களின் மஹிமைகள் முதலானவைகளை எடுத்துக்காட்டி பக்தியைபுகட்டக்கூடியது. விலை அணா 12.

மஹாத்துமாக்கள்:—இந்நூல் ஈஸ்வர அம்சபூதர்களாய் கலியினில் தம்மஹிமைகளை எடுத்துக்காட்ட அவதரித்த சில மகாத்துமாக்களின் சரிதைகள் அடங்கியது. விலை அணா 4.

ஸ்ரீசுப்பிரமணியர் ஸர்வ ரோக நிவாரண மாந்திரிகம்:—இந்நூலில் ஸ்ரீசுப்பிரமணியர் அவதாரம், மந்திர உற்பத்தி, பஞ்சாக்ஷரம், பஞ்சபூதங்கள் ப்ரணவமந்திரம், உபாஸனை, கடவுள் முதலிய யாவும், 27 மஹா மந்திரங்களும், காளி, ஆஞ்சநேயர், கெருடர், நரஸிம்மர் இவர்களின் மந்திரங்களும், திருநாமங்களும்; பூஜா விதிகளும்; அவைகளின் சிகிச்சைகள் செய்வதும், சக்கிரங்களாலும், படங்களாலும் விளங்கி யிருக்கின்றன. விலை ரூ. 1—8—0.

கந்தபுராண வசனச் சுருக்கம்:—இதில் கந்தபுராணத்தைச் சுருக்கமாயும், வசன மூலமாயும் அச்சிட்டிருக்கிறது. இதன் முற்பக்கத்தில் ஸ்ரீ முருகக்கடவுளின் திருவுருவ படங்களும் அமைத்திருக்கின்றது. விலை அணா 8.

ஞானமிர்தம்:—பஞ்சாக்ஷர மஹா மந்திரத்தின் தத்துவங்களை நன்கு எடுத்து போதிக்கும் இனிய வேதாந்த தமிழ் நாவல் விலை அணா 10.

கர்ணன்:—மஹாபாரதத்தில் கியாதிபெற்ற கர்ணனின் சரித்திரம் விலை அணா 2.

Apply to:—C. S. Rathakrishna Aiyar,
Proprietor, Mangala Vilasa Book Depot,
KUMBAKONAM.

ஓம்:

மஹாத்மாக்கள்.

ஸ்ரீசங்கரபகவத் பாதாசாரிய சுவாமி சரித்திரம்.

தண் கடல் புடைசூழ் தாரணியதனில் மல்கிருளகல மான்யப் பரப்பிர்மத்தாலருளப்பெற்ற சைவசமயம்.

பூர்வகாலத்தில் பௌத்தசமணசார்வார்களது மதஸ்தர்களால் நம்மவர்கள் மயக்கப்பட்டு, நம் வேதநம்பிக்கையையிழந்து வர்ணாச்சிரமாதி பேதத்தையே கைவிட்டு "கொண்டதேகோலம் கண்டதே காக்ஷியாக" அலைந்துவிட்டதை, லோகோபகாரத்தையேதொழிலாகக்கொண்டவரும்,மகரிஷிச்சிரேஷ்டரும், பிரும்மபுத்திரருமானநாரதபகவான், கண்டுகைலைக்கெழுந்து, லோககர்த்தாவாய்விளங்காநின்ற எம்பெருமான்கருணாநிதிபரமசிவத்தினிடத்தில் நம்மவர்களின்நிலைமையைத்தெரிவிக்கவும் அதையறிந்து, எம்பெருமான் கிருபாளு, மலையாளக்ஷேத்திரத்தில் காலடி யென்கிற கிராமத்தில், பகவத்பக்தசிகாமணிகளாக விளங்காநின்ற சிவகுரு, ஆரியாம்பிகை, யென்றதபோநிஷ்டர்களாகிய தம்பதிக்கு, ஸ்ரீ சங்கரனென்னும் திருக்குமாரனாக, சுமார் ஆயிரத்து முன்னூறு வருஷத்திற்கு முன் அவதரித்தார். அவர் பிறந்த மூன்றுமாண்டில் சிவகுருவென்னும் இவரின் பிதாவான பிராமணோத்தமரின் காலம்சென்று ஸத்கதியடைந்து விட்டார். பிறகு அக்குழந்தை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக மாதா ஸ்ரீஆரியாம்பிகையின் பரிபாலனத்தினால் வளர்க்கப்பட்டு எதாவிதிப்பிரகாரம் எழாமண்டில் உபநயநஞ்செய்வித்து,ஸத்

குருவிடஞ்சென்று வேத சாஸ்திரங்களை வெகு சீக்கிரத்தில் செவ்வென தெரிந்துகொண்டார். அவர் சாஸ்திரமுறைமை யையும், உலகவாழ்க்கையையும் தவறாது நடந்த ஸத்குருவை யடைந்தாரேயன்றி வேறில்லை. ஏனெனில் அவர் ஸர்வஞ்ஞ மூர்த்தியானபடியினால், அவரறியாத விஷயம் யாதுளது? ஒன்றுமேயில்லை! அக்காலத்திலேயே அகஸ்தியர் முதலிய அநேக மஹரிஷி சிரேஷ்டர்கள் அவரிடம் ரகஸ்யமா யணுகி இவரைஸர்வஞ்ஞரென்று கண்டு பரமானந்த பரிதரா வார்கள். இவரின் புத்திவண்மையை செவியுற்றவர்கள், யாவ ரும், பரமானந்த புரிதருணர்கள் யென்பதற்கு சந்தேகமே யில்லை. இஃதிங்ஙனமிருக்க, தான்வந்த காரியத்தை நிறை வேற்றவேண்டுமென்ற நோக்கங்கொண்ட கருணாநிதி ஸ்ரீசங்க ரர் ஒருதினத்தன்று தம்மாதாவை நோக்கி அம்மா! இச்சம் ஸாரம்பெரிதும் கொடிது, இச்சரீரமும் ஸம்ஸாரவாழ்க்கை யும், மின்னற்கொடிபோல் க்ஷணத்திலழியும். இச்சம்ஸார வாழ்க்கை துக்கமேயன்றி சுகமேயில்லை. நம்முன் பிறந்தவர் களும், நம்மோடு பிறந்தவர்களும், இறந்துகொண்டே யிருக் கிறார்கள். நமது ஆயுள் நிலையில்லாதது; சீக்கிரத்தில்சென்று விடும்; "நீர்மேல்குமிழிபோலும், மின்னற்கொடிபோலும்;" நமது சரீரம், உண்டாகி அழிகின்றது. இதை நிலை யென்று எண்ணலாகாது. ஆனதால் சந்யாஸாச்சிரமம்பெற்றுமுக்திக் குறிய மார்க்கத்தைத் தேடவேண்டுமென்றும் பற்பல வித மாகக்கூறினார். அதைக்கேட்ட தாய், ஹா! யென்று ஆச்ச ரியமும் துக்கமு முற்றவர்களாய், குழந்தாய்! நான் உன்னை அருந்தவஞ் செய்துபெற்றெடுத்தேன்; நீ இப்பொழுதே விர க்தியுடன் வைராக்கியமாய்பேசுகின்றாய், இப்பால்யத்தில் கற்றுத்தேர்ந்து, பண்டிதராகி, ஓர் பெண்மணியை மணர் ந்து, அவளோடு இல்லறத்திலிருந்து, தேவமனுஷியாள்

பிதுர்க்கடன்களைச்செலுத்தி அந்தியகாலத்தில் கிழமைப்பருவத்திலன்றோ சந்யாஸாச்சிரமம் பெறவேண்டும். "குட்டி வேதாந்தம் குடியைக்கெடுக்கும்" என்னும் வாக்கியத்திற்கிணங்க இப்பொழுதே விரக்தியை யடைந்துவிட்டாய் சந்யாஸாச்சிரமம் பெறுவது கூடாதென்றும் மறுத்தனள். அதைக் கேட்ட நம் சங்கரமணி சிறிது மாதாவின் வார்த்தைக்கிணங்கியதுபோல் நடித்தனர். ஒரு நாள் இவர் (கிழவியான) சூர்ணி என்னும் நதிக்கு ஸ்நானத்திற்குச்சென்றனர்.

அங்கு நீராடுங்காலத்தில் ஓர் முதலை தமது பாதத்தைப் பிடித்து ஆழ்ந்த நீரில் இழுத்ததுகண்டு அச்சமபம் இதுதான் தமது காரியம் நிறைவேறும்காலமென்றெண்ணி, மாதாவைப்பார்த்து அம்மா! என்னை முதலை யிழுக்கிறது? இன்னும் சிறிதுநேரத்தில் எனது உயிர் போய்விடும். இப்பொழுதாவது சன்னியசிக்க எனக்கு அனுக்கிரகிப்பாயானால் நான் பிழைத்தாலும் பிழைக்கலாம், என்று வருந்திக் கேட்டார். அதைக்கேட்ட தாய், என் கண்மணியே; உன்னையிழந்து நான் இப்பூவுலகில் நான் எப்படி ஜீவிப்பேன். நீ சன்னியாசியாகவாவது ஜீவித்திருந்தால், காதாலாவது உனது வாழ்வைக்கேட்கலாமன்றோ. ஆதலால் சன்னியாசித்துக்கொள்க, என ஆக்ஞை அளித்தனள். அதைக்கேட்ட எம்பெருமான் மானசீகமாக சாஸ்திரிகமாய் சன்னியாசத்தை சுவிகரித்தார். உடனே அது மறுஜென்மமானதால், முதலையுமிவரை விட்டுவிட்டது. வெளிவந்து மாதாவை நமஸ்கரித்து அவளை தனது பந்துக்களிடத்தில் ஸம்ரக்ஷிக்கும்படி ஒப்புவித்து ஓர் குருவைநாடி, ஸ்தலங்கள்தோறும் சென்று, குருவாயூர், என்னும் ஸ்தலத்திற்கு வந்தார். இவரது இளம்பருவத்தையும் சுவிகரித்திருக்கும் பெரிய ஆச்சிரமத்தையும் கண்ட, நம்பூரி பிராமணர்கள் இவரது சன்னியாச ஆச்சிரமத்

அனேக நியாயங்களால் மறுத்தார்கள். அதைச்செவி யுற்றநம்குருமூர்த்தி சன்னியாச ஆச்சிரமமே, மோக்ஷஹேது வென்றும், அதைச் சுவிகரிப்பதற்குக் காலநியமமில்லை என் றும், எப்பொழுது விரக்தியுண்டாகிறதோ, அப்பொழுதே சுவிகரிக்கலாமென்றும், அநேகசுருதியுக்திபிராமணங்களால், அவர்கட்கறிவித்து, அவர்களால் ஸன்னியாஸபிரதஷ்டாபனு சாரியார் என்னும் பட்டமளிக்கப்பெற்று, அங்கு அநேக அற் புதங்களை செய்து, தீர்த்தாடனத்தின் பொருட்டு பல ஸ்தலங் களுக்கு யாத்திரை செய்தார். இங்ஙனம் இவர் யாத்திரை செய்துகொண்டு அநேக ஸ்தலங்களை தெரிசித்து குருவைத் தேடி, யமுனாநதிதீரத்தில் சஞ்சரிக்கும் காலத்தில், ஓர் அடர் ந்த சோலை வந்தவுடன் சரீரத்தில் மயிர்க்கூச்சலும் மனதில் ஓரானந்தமும் தைரியமும் உதிக்கவும், அதுகண்டு இதுதான் நமது குருநாதன் வசிக்குமிடமென்று மகிழ்ந்து, ஒருபுற மாய் திரும்பியவுடன் ஒரு குகையை கண்டனர். அதன் வாயிலிற்போய்நின்று உற்றுப்பார்த்ததும்ஒருமஹா யோகி சித்தாசனத்திலிருந்து சித்தத்தை நிலைநிறுத்தி சிந்தையன் றியிருக்கும் அழகை நோக்கிப்பிரமித்து, தன்னைமறந்து, பரமானந்தபரிதராய், அவரை ஸ்தோத்திரம் பண்ணினர். அதைக்கேட்ட அம்மஹாயோகி இவரது வாக்கின் வல்ல மையையும், புத்தியின் நுட்பத்தையும், முகத்தின் மலர்ச்சி யையும், ஆச்சிரமத்தின் பெருமையையும், இளமைப்பருவத் தையும் நோக்கி, அருகிலழைத்து அபயஸ்தம் தந்தருளி ஞா னதிருஷ்டியால் சங்கரனென்றுணர்ந்து, லோகத்தை ரட்சிக் கவந்த பெருந்தகையே, நும்போலியருக்கு உபதேசம் வேண் டுமோவென்றார். அவர்தான் ஸ்ரீமதாசார்யர்களுடைய குரு ஸ்ரீகோவிந்தயோகி யென்பவர். அதைக்கேட்ட சங்கரர் கரு ணையங்கடலே, லோகவாழ்க்கையும் வேதவிதியையும் தவறா

லாகாதன்றோ என்றார். ஆம் அங்ஙனமேசென்று அப்பொழு தே அவருக்கு வேதத்தின் முடிவான மகாவாக்கியத்தை உபதேசித்து, பிரும்மத்தின் பிரதீகமான பிரணவத்தையும் உபதேசித்துத், தனது சிஷ்யனாக சுவிகரித்தார். அங்குசில காலம் குருவிற்கு சிஷுருஷை பண்ணிக்கொண்டிருந்து அவ ரால் லோகத்திற்காக அத்வைதஸ்தாபனம் செய்கவென, ஆக்ஞையைப் பெற்று, தனது பரமகுருவான கௌட பாத சாரியரை அடைந்து, அவரது அனுக்கிரகம்பெற்று காசிக் குச்சென்று வியாஸபகவான் தெரிசனத்தை நாடி, பத்திரி காச்சிரமத்திற்குப் போகும் வழியில் நாராயணர் என்னும் மகாயோகியின் தெரிசனம் பெற்று, அவரால் வியாஸதேரி சனம் இப்பொழுது கிடைக்காது, நீர்காசியில்போய் உபனி ஷத்து, பிரம்ம சூத்திரம், கீதை முதலியவைகட்கு பாஷ் யஞ்செய்து, அத்வைதமதத்தை நிலைநிறுத்த பிரவர்த்திப் பிரேல் அங்கேயே உமக்கு வியாசரது அனுக்கிரகம் கிடை க்கும் என்று தெரிவிக்க, அங்ஙனமே திரும்பி வந்துவிட் டார். வந்து காசியில் தனக்கு ஒரு ஆச்ரமம் எற்படுத் திக்கொண்டு உபநிஷத்தின் வாக்கியங்களெல்லாம் ஒரே பிரம்ம சுவரூபத்தைக்கூறுகிறதென்றும் அதையன்றி அன் னிய பதார்த்தமெல்லாம் கானலில் ஜலம்போல் அப்பிரம்மத் தினிடத்திலேயே, அஞ்ஞானத்தால் கல்பனையாக தோன்று கிறதென்றும், அஞ்ஞானமொழிந்தால், ஜீவனும் அந்த சுவ ரூபத்தையேயன்றி வேறில்லையென்றும், அந்த பிரம்மம் ஒன்றே மூன்றுகாலத்திலும் அழிவில்லாததாயும், சத்திய மாயும், ஞானமாயும், ஆனந்தமாயும், எப்பொழுதும் பிர காசிக்கிறதென்றும், கருத்துக்களை அமைத்து முக்கூறிய புத்தகங்களுக்கு பாஷ்யமியற்றினர். அப்பாஷ்யங்களின் பெருமையை என்னென்று சொல்லுவேன்; திராக்ஷபாகமாக

யமைந்த பாஷ்யம் மதகண்டனத்திற்காகப் பிரயோகித்திரு க்கும் ஆழ்ந்தயுக்திகளும், ஒவ்வொரு இடங்களில் சுருதி களின் மர்மங்களை எடுத்துக்காட்டும் புத்திவண்மையையும், சூத்திரங்களின் தாத்பரியமமைந்த சுருதிகளைக்கோர்த்த நுட் பத்தையும் நோக்கினல் சங்கரனையன்றி மற்ருேரால்செய்ய சாத்தியமில்லை என்றே தோன்றும். அதற்கென்றே அவதரி த்த மூர்த்தியானதால், அதின் பெருமையைச் சாற்றவும் வேண்டுமா! பிறகு அப்பாஷ்யத்தைப்பற்றிவந்தபூர்வபக்ஷவா திகளனைவரையும் கண்டித்து, காசியிலேயே அநேகருக்கு சா ந்திபாடம் பண்ணிவைத்துக்கொண்டு இந்திரனது ஸபையில் உள்ள பிரகஸ்பதி பகவானைப்போல் விளங்கினர். அதைக் கேட்ட காசிருஜன், நம் கருணநிதியைப்பார்க்கவந்ததும் பரமானந்தம்பெற்று அடிமையைத்தொண்டருய் ஏற்றுக் கொள்ளும்படிக்கும் தனது சர்வசொத்தையும், தன்னையும் அவர் சரணத்திற்கே அர்ப்பணம்பண்ணி ஆக்ஞைப்படி நடக்கிறேனென்று, அஞ்சலிபந்தனய் நின்ருன். அதைக் கண்டு அவனைசிஷ்யனய் சுவிகரித்து, அங்குசிலகாலம் வசிக் கும்போது கிழக்கே இருந்து, தீரனயும் சாஸ்திரத்தில் வல்ல வராயுள்ள ஓர் பிராம்மணச்சிறுவர், ஒருவர் வந்து அவரது பாதத்தை வணங்கி தனக்கு சன்னியசத்தை கொடுக்கவேணு மென்று பிரார்த்திக்க அவரது வைராக்கியத்தையும் பக்தி யையும் கண்டு அவருக்கு ஸன்னியஸத்தைக் கொடுத்து, உப தேசித்து அருகில் வைத்துக்கொண்டார். ஒருநாள் நதிக்கு, அக்கரையில் நம்ஆசார்யமணிகள் இருக்குங்காலத்தில் தன துசிஷ்யனை அழைத்தார். சிஷ்யன் உடனே வேறு யோஜனை யன்றி நதியில் இரங்கி ஆழத்தில் நடக்கத்துடங்கினர் அப் பொழுது கங்காதேவியானவள், அவரது ஒவ்வொரு பாதத்திற்கும் ஒவ்வொரு பத்மமாகக்கொடுத்தாள். அதைக்

கண்ட நம்மாசாரியாள் அந்த சிஷ்யருக்கு பத்மபா தர், என்ற யோகப்பட்டம் அளித்தார் இப்படி அநேக சித்திகளுடன் அங்கிருக்கும் காலத்தில், ஒருநாள், காலையில் ஓர் விருத்தர் ஊன்றுகோலோடு ஆசாரியாள் ஸன் னிதானத்திற்கு வந்தார். அவரைக்கண்டதும், அவருக்கு உபசாரஞ்செய்து, ஓர் ஆசனத்தில் எழுந்தருளும்படி பிரார்த் தித்தார். அப்பொழுது அவ்விருத்தவேதியர், ஆசாரியளது பாலப்பருவத்தையும், புத்தியையும், பார்த்து வியந்து, எதி ரில் இருக்கும் புஸ்தகம்யாது என்றார். அப்பொழுது பத்ம பாதர் வியாஸஸூத்திரத்தின் அத்வைத பாஷ்யம் என்றார். அதைக்கேட்டு அவ்வேதியர் அதிற்சில சூத்திரங்களின் பாஷ்யத்தை படிக்கவென ஆஞ்ஞாபித்ததும், அதில் அநேக சங்கைகளைக் கேட்டார். ஒவ்வொன்றுக்கும் புங்கானுபுங்க மாக உத்தரம் வருவதைக்கண்டு மகிழ்ந்து, விதண்டையாக சிலகேழ்விகள் கேட்டனர். அதற்கும் சாவதானமாக சமா தானம் உரைத்தனர். ஆண்டு பத்மபாதர் அவ்வேதியரது புத்திவண்மையையும், தேஜஸையும், ஞானதிருஷ்டியால் அறிந்து, உவகையுடன் கூறலுற்றார். சங்கரனும் நாராயண னும் ஒன்றுகூடி வாதித்தால் மத்தியஸ்தம் பண்ணுவதுயார், என்று இவ்விதமாக அநேக நயவார்த்தைகளைச் சொல்லிய துடன், அவ்வயோதியரே வியாஸபகவானாக எதிரில் தோ ன்றினார். உடனே ஆசார்யாள், நமஸ்கரித்து, அஞ்சலியஸ் தராய் ஹே பிரபோ! நான் வந்தகாரியம் முடிந்து விட்டது, எனக்கு பதினாறுவயதும் முடிந்தது; இனி எனது கைலாச த்திற்குச் செல்வேன் என சொல்லவும், வியாசபகவான், இன்னும் பதினாறு ஆண்டிருந்து எனது கருத்தாகிய அத்வை தமதத்தை உலகெலாம் பிரகாசிக்கும்படி ஸ்தாபித்து, பிறகு போகலாமென்று கூறிமறைந்தார். அவ்வாஞ்ஞையைக்கைக்

கொண்டு, காசி அரசனேயும் சைன்னியத்துடன் கூட் அழை த்துக்கொண்டு திக்விஜயஞ்செய் து, வருங்காலத்தில், ஒரு கிரா மத்தில், பிரபாகரபட்டர் என்னும் பண்டிதசிகாமணி, ஆசார்ய ளது தெரிசனத்திற்கு ஒரு சிறுவருடன் வந்து, நமஸ்கரித்து அடியில் வருமாறு கூறலுற்ருர். பகவன்; இக்குழந்தை எனது புத்திரன்; இவன் பிறந்தது முதல் இதுகாறும் ஒரு வரோடும் பேசுவதில்லே; ஒன்றையும் உணரான், உலகவின் பத்தை அவனறியான்; உணவும்நான் கொடுத்தாலன்றி வேண் டான்; நான் மணி மந்திர ஔஷதங்களால் இவ்வியாதியை போக்கத்துணிந்தும் பயன்பெறவில்லே. தமது சரணத்தண் டை அழைத்துவந்தேன் எனவும், ஆசாரியாள அச்சிறுவனே நோக்கி ஹெ குழந்தாய்! நீயார்! எங்குபோகிருய், உன் பெய ரென்ன; இங்குவருவதற்குக் காரணம் யாது? யெனவினவும் அதைக்கேட்டவுடன், அவர் மேகத்தின் கர்ஜனேயைக்கண்ட மயில்போல் பரமாநந்தராய் லோகத்தின் பிரவிர்த்திக்குச் சூரியன் எப்படி நிமித்தமாய் இருக்கிருரோ, அங்ஙனமே மனம், கண்முதலிய இந்திரியங்களினுடைய சேஷ்டைக்குக் காரணபூதமாயிருக்கிற ஆகாசத்திற்கொப்பாய் அகண்ட மாய், நித்தியமாய், பிரகாசிக்கும் பரமாநந்த சுவரூபமாய் இருக்கிறேன், என்று இத்தகைய அருமையான பொருளட ங்கிய சுலோகங்களேக், கூறியவுடன், அவரது தந்தை புத்தி ரனது புத்திவண்மையைக்கண்டு இவர்மஹாஞானி, இப்புத் திரன் எனக்கு உபயோகமில்லே தம்மிடத்திலேயே இருக் கட்டுமென்று கூறிப்போய்விட்டார். உடனே எமகருணு நிதி அம்மஹானுக்கு சன்னியாசலிங்கத்தையளித்து "ஹஸ் தாமலகர்" "உள்ளங்கைநெல்லிக்கனிபோல்" ஆத்மாவையறி ந்தவர், என்பது பொருள் என்ற நாமத்தால் அழைத்தார். அன்று முதல் ஹஸ்தாமலகர் நம்குருமணியோடு சாயைப்

போல பரமானந்தராய் சஞ்சரித்தார். இங்ஙனம் அநேக மஹிமையோடு பௌத்தாதி பலமதங்களை கண்டித்துக்கொண்டு வரும்போது, உலகத்தில், ஆசார்யளது மஹிமைகளைச் செவியுற்ற ஒவ்வொரு மதவாதிகளும், நேரில்வந்து தங்கள் மதத்தை உபந்நியசித்து, பயன்பெறுது ஆசார்யளது அபிப்பிராயத்தை கைகொண்டார்கள். இங்ஙனமிருக்க, ஒருபகலில் பாடம் கூறுவதற்கு துடங்கும்போது தனக்கு பரமப்பிரியரான ஒரு சிஷ்யர் வராத்தைதக்கண்டு தாமதித்தார்கள். அதைக்கண்டமற்றவர் அவர்வரினும் வராமலிருப்பினும் ஒன்றுதான், என்று அவர்மந்தர், என்பதையும், சாஸ்திரத்தில் பயிற்சி இல்லை என்பதையும், அர்த்தத்தால் தெரிவித்தார்கள். அதைக்கண்டு நம்கருணாநிதி, மந்தஹாஸத்துடன் சிறிது மௌனமாய் கண்ணை மூடிக்கொண்டிருந்தார். அச்சமயத்தில் அச்சிஷ்ய சிகாமணி குருவினது வஸ்திரங்களை துவைத்துமடித்து எடுத்துக்கொண்டு, ஆசார்யளது சன்னிதானத்தில், உயர்ந்த பிராஸங்களுடன் கூடியதும், மிகப்பெரியதுமான தோடக விருத்தங்களால் தோத்திரம் பண்ணிக்கொண்டு வந்து நின்றார். அதைக்கண்டு மற்றவர்கள் பயந்து நிற்க, எம் ஞானநிதி அவரைத் "தோடக" என்று அழைத்தார் அதுமுதல் அம்மஹானுக்கு தோடகாசாரியர் என்று பெயர் வழங்கியது. இது நிற்க, ஆசார்யாள் காச்மீர தேசத்தில் சஞ்சரிக்கும் சமயத்தில் பட்டகுமாரர் என்பவர் பூர்வ மீமாம்ஸை சாஸ்திரத்தில் வல்லவராய் பௌத்தாதி மதங்களை அவ்வாசிரியர்களிடத்தில் மாறுவேஷம் பூண்டுபடித்து, வெளிவந்து அதையெல்லாம் அடியோடு கண்டித்து, பூர்வமீமாம்ஸையை ஸ்தாபித்து எங்கும் கருமமார்க்கத்தைப் பரப்பி வேதவிதியை ஸ்தாபித்து சுப்பிரமணிய அம்சபூதராய் பூலோகமெல்லாம் உலாவி, இற

தியில் தாம் பௌத்தகுருக்களிடத்தில், மாறுவேடம்பூண்டு படித்து, பிறகு அவர்களையே கண்டித்த குருத்துரோகத்திற்காக பிராயச்சித்தம்செய்துகொள்ள (உமியால மூட்டிய தீ) யில் படுத்து வருந்துகிறாரெனக் கேழ்வியுற்றார். உடனே சங்கரர் அங்கு சென்ற சமயத்தில் அவரது பிராண நிரியாண சமயமாய் இருந்ததால், வருந்திநிற்க அதைக்கண்ட, அம்மஹான், ஆசார்யளது செய்தியை ஞானதிருஷ்டியால் அறிந்து தனது பிராணனைச் சில நிமிஷங்கள் நிறுத்திக்கொண்டு, ஹே பிரபோ! தங்கள் மஹிமையை நான் அறிவேன் எனது அந்திகாலத்தில் தரிசனம் கொடுத்தது, எனது பூர்வபாக்கியமே. தங்கள் அத்வைத மதத்தின் உண்மையை நானறிவேன். ஆனால் தம்மோடு அதிகசாவகாசமாய் பேசுவதற்கு காலமில்லை; எனது சிஷியர் மண்டனபண்டிதர் என்பவர் காஸ்மீர் பட்டணத்தில் இருக்கிறார். அவரோடு தாம்வாதித்து பூர்வமீமாம்ஸையானது கண்டிக்கப்படின், அது எனது சம்மதமே, என்றுகூறி பிராணனை இழந்தார். உடனே அங்கிருந்து திரும்பி மண்டன பண்டிதர் கிரஹத்தண்டைவந்து பார்க்குங்கால், கதவு மூடப்பட்டிருந்தது. அதைக்கண்டு தனது சிஷ்யர்களை ஓரிடத்து வைத்து தாம் தனிமையில் குளிகாசித்தியால் ஆகாசமார்க்கமாக அவர் விட்டுப்புறம் சென்றார். அச் சமயத்தில் அங்கு சிரார்த்தகாலமானதால், வியாஸரையும், ஜைமுனி பகவானையும் பிராம்மணராக வரித்து ஹோமத்திற்கு, சங்கல்பித்துக் கொண்டிருந்த மண்டனமிசிரர் இவரை நோக்கி “ குதோ முண்டி ” (எதற்காக மொட்டை) என்று விதண்டையாக இவரது ஆச்ரமித்தை பரிஹஸித்து பேசியதை வியாஸ பகவான் பார்த்து, அவரைநோக்கி பண்டிதரே! சிரார்த்த காலத்தில் சன்னியாசி வந்தால் அவர்கள் விஷ்ணுரூப மானதால்

அவர்கட்கு பிக்ஷாவந்தனஞ்செய்து விஷ்ணு வருணத்தில் வைக்கவேண்டும். அங்ஙனமே செய்யும்;எனக்கூறவும் அங்ஙனமே அவர் பிக்ஷைக்கழைத்தார்.நம்சங்கரமணி வாதபிக்ஷை வேண்டுமென்றார். உடனே அவர் இப்பொழுது அன்னபிக்ஷை தந்து பிறகு வாதபிக்ஷை தருவேன் என்றார். அங்ஙனமே சம்மதித்து சிரார்த்தம் முடிந்ததும் உடனே வியாஸரும் ஜைமுனி இவ்விருவர் முன்னிலையில் வாதத்திற்கு ஏற்படுத்தி மண்டனமிஸ்ரரை யழைத்தார்கள். வாதத்தில் மத்தியஸ்தம் செய்வதற்கு இவர்களைப்போன்ற பண்டிதர்கள் ஒருவரும் இல்லாததால், யோஜிக்க ஆசார்யர் கூறுகிறார். தமது பத்தினி சரஸ்வதியின் அம்சமென்றும் நீர் பிரம்மதேவன் அம்சமென்றும், நானறிவேன், ஆனதால் தமது பத்தினியையே மத்தியஸ்தமாக வைத்துக்கொள்ளுவோமென, அங்ஙனமே இருவரும், சபையோரும், சம்மதித்து வாதிக்க ஆரம்பித்தார்கள். ஆண்டு அப்பெண்மணி இவர்கள் இருவரும் மேதாவிகளானதால் இவர்கள் திறமையையறிவது கஷ்டமெனக்கண்டு, இரண்டு பூமாலைகளை அபிமந்திரித்து, இருவர்கழுத்திலும் போட்டு, எதுவாடுமோ அவரது வாதம் தாழ்ந்தது என்று கூறினர். சங்கரரது மதம் பிர்ம்மஞானமே மோக்ஷசாதனமென்றும் பிர்ம்மம் ஒன்றேயுளது, அதனிடத்தில் பொய்யாய் ரஜ்ஜுவின் சர்ப்பம்போல், கர்ப்பிக்கப்பட்டிருக்கிறதென்பதாம். பண்டிதரது மதம் கர்ம்மமே மோக்ஷசாதனமென்பதாம் இவ்விருவாதங்களும் பதினாறு நாள் பரியந்தம் வாதிக்கப்பட்டன. வாதத்தில் ஸ்ரீசங்கரர் தளர்ந்தால் மறுபடியும் கிரஹஸ்தராய் விடுவதென்றும், பண்டிதர்தளர்ந்தால் சந்நியாசியாய் விடுவதென்றும், சபதமிட்டிருந்தபடி. கடைசிதினத்தில் அப்பெண்மணி பண்டிதரது மாலை வாடியதைக்கண்டு இருவரையும் பிக்ஷைக்கு

அழைத்தனள். அதுகண்டு தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். தேவதுந்திபிகள் கோஷிக்கப்பட்டது. பிறகு மண்டனபண்டிதருக்கிருந்த சில சந்தேகங்களை நிவர்த்தித்து, அவருக்கும் ஸந்நியாஸம் கொடுத்தனர். பிறகு அப்பெண்மணி எனது நாயகனை வென்றதுமட்டில் உமது வித்தையின் பெருமைக்கழகன்று; எம்மோடும் வாதிக்கவேண்டுமெனகேழ்க்க, அங்ஙனமே வாதிக்கவும் எல்லாவித்தையிலும் எம்வித்வன்மணியான சங்கரர் மேன்பட்டதும் அவ்வம்மை மதனசாஸ்திரத்தைக் கேழ்க்க ஆரம்பித்தாள். அதை எமதாசாரியர் கனவிலும் காணாததால், அதைச் சிலநாளில், கூறுவேனென வெளிவந்தார், உடனே தனது சிஷியர்களுடன் ஓர் பட்டணத்திற்கு போகும்போது, அவ்வூர் அரசன் இறந்துவிட்டதாகக் கேழ்வியுற்று, தனது சிஷ்யர்களிடத்தில் தனது சரீரத்தை ஓர் ஏகாந்தஸ்தலத்தில் வைத்துவிட்டு, யோகசாஸ்திரவிதிப்படி, அவ்வரசனது சரீரத்தில் புகுந்து, எழுந்தார். உடனே மந்திரி முதலியோர் மகிழ்ந்து உபசாரஞ்செய்தார்கள். அப்பொழுது ராஜ்ஜிய விஷயங்களை அரசனது பூர்வஞாபகம்போல் நடத்தி இராக்காலங்களில் அந்தப்புரத்தில் ஸ்திரீகளுடன் காமசாஸ்திரத்தை பயிற்சிசெய்து அங்கு ஒரு புஸ்தகமெழுதினர். இதைக்கண்ட ஸ்திரீகள் பூர்வத்தில் அரசன் மந்தராயிருந்ததையும், இப்பொழுது மேதாவியாய் இருப்பதையும், கண்டுமருண்டு மந்திரிகளை ரகசியமாய் வரவழைத்து அரசனது சரீரத்தில் யாரோமஹானது ஜீவன்பிரவேசித்திருக்கிறது, அக்குறிகளை ரொம்பவும் நாங்கள் கண்டோம் என்றார்கள். அதைக்கேட்ட மந்திரிகள், ஆலோசித்து இம்மஹானின் சரீரம் எங்காவது இருக்குமாயின் அதை எரித்து விடுவோமானல், இச்சரீரத்தை விட்டசையாமல் இருப்பார், என்று எண்ணி ஏவலாளர்களி

டத்தில் பட்டணத்தின் திக்குகளில் எங்காவது சரீரங்கள் ஜீவினின்று கிடக்குமாயின் உடனே எரித்துவிடுங்கள் என ஆஞ்ஞையளித்தார்கள். அவர்கள் அங்ஙனமே சுற்றி ஓரிடத்தில் இருக்கக்கண்டு எடுத்து தீமூட்டிவிட்டார்கள். இது நிற்க, பத்மபாதர் முதலிய சிஷ்யர்கள் சரீரத்திடத்து அநேக நாள் இருந்தும் கருணாநிதி வராததால், குருவிடம் போய் உடனே அறிவிப்போமென பட்டணத்திற்குச்சென்று, அரண்மனைக்குள் மாறுவேஷத்துடன் புகுந்து, வேதாந்தக் கருத்தமைந்த ஸ்லோகங்கள்கூற, அதையறிந்த நம் அறிஞ் சிகாமணி, உடனே ஒருவரும் அறியாமல் ஒரு அரையில் போய் சரீரத்தை விட்டு, வெளிக்கிளம்பி தனது சரீரத்தண்டை போனவுடன் எரிவதைக்கண்டு உள்ளேபுகுந்து லக்ஷ்மிநரசிம்ம மமதெஹி கரவல்லபம் (ஹெ லக்ஷ்மி நரசிம்ம எனக்குக் கரங்கொடு) என்ற வாக்கியத்தை இறுதியில் வைத்து அநேக சுலோகங்கள் கூறி, நரசிம்ம மூர்த்தியை பிரார்த்திக்க, உடனே நரஸிம்மமூர்த்தி பிரத்தியக்ஷமாய், கையைக்கொடுத்து தூக்கிவிட்டனர். உடனே சிஷ்யர்களும் வந்து சேர்ந்தனர். பிறகு சிஷ்யர்களுடன் சரஸ்வாணி என்ற சரஸ்வதியண்டை சென்று, காமசாஸ்திரத்திலும் வென்றதும், சரஸ்வதி தேவி பிரம்ம லோகத்திற்கு போவதற்கெழவே பிரார்த்தித்து அழைத்துக் கொண்டு சிருங்ககிரியில் சாரதாபீடம் ஏற்ப்படுத்தி அங்கு தேவியை ஆவாகனஞ்செய்து மண்டன பண்டிதருக்கு சன்னியாசி ஆச்சிரமத்தில் சுரேசுவராசாரியார் என்ற பட்டம் கொடுத்து அங்கு ஸ்தாபித்தும், ஜகன்னாதம், துவாரகை, பிரம்மகபாலம், முதலிய இடங்களில் மடங்கள் ஏற்படுத்தி அவைகளில் மூன்று சிஷ்யர்களையும் வைத்து எப்பொழுதும் அத்வைத பிராசாரஞ் செய்துகொண்டு சிஷ்யபரம்

பரம்பரைகளுக்கு உபதேசிக்கச்செய்து மாதாவின் அந்தி காலத்தை அறிந்து காலடிக்குச்சென்று மாதாவிற்கு ஸமஸ்காரஞ்செய்து பிறகு அநேக இடங்களில் சஞ்சரித்து திக்விஜயம்செய்து சர்வஞ்ஞபீடமேறி ஜகத்குருவாய்விளங்கி மிக்க அற்புதங்களை லோகத்திற்குத் தெரிவித்து பத்திரிகாச்சிரமத்தில் தத்தாத்திரேய குகையிற் புகுந்து பரமானந்த சுவரூபமாயினர் என்று ஆன்றோர் முகமாய் நாம் அறிந்திருக்கிறோம். இத்தகைய மஹா குருவின் ஆராதனமும் நம்மவரிடத்து குறைந்துவிட்டது. குருபக்தியே மோக்ஷத்திற்கு முக்கிய சாதனமென்பதை அறிந்திருந்தும் பக்தி செய்பவர்கள் மிக்க அருமையாய் விட்டார்கள். அந்தோ ! காலத்தின் கொடுமையே. எச்சமயத்தோறும் குருபக்தியையே முக்கியமாய்க் கொண்டிருக்கிறார்கள் ஆனதால் நாமும் அப்பக்தியையே செய்து சித்தி முக்திகளைப் பெறுவோமாக.

ஸ்ரீ ராமஜெயம்.

ஜகத்குரு ஸ்ரீ பகவந்நாம ஸ்ரீ போதேந்திரஸ்வாமி அவர்கள் சரித்திரம்.

ஜகம்புகழும் காஞ்சீ நகரில் மண்டனமிசிர அக்ரகாரத்தில் கேசவபாண்டுரங்க யோகியென்று ஒரு விப்ரசிரேஷ்டர் இருந்தார். அவர் ஸுகுணா என்ற தர்மபத்தினியுடன் வர்ணாசிரம விதிவழுவாமல் அவ்விடத்தில் நிலைபெற்றிருக்கும் காமகோடி மடத்தில் ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத் பாதாசார்ய பரம்பரை 58-வது பட்டத்தில் விளங்கும் ஜகத்குரு விசுவாதிகேந்திர ஸரஸ்வதி சரணருக்கு பணிவிடை செய்து வந்தார். அதனால் சிலநாளைக்குப்பிறகு அந்தமகானுக்கு ஒரு புத்திரன் உண்டானன். அக்குழந்தைக்கு புருஷோத்தமனென்று அழகியபெயரிட்டுச் சீராட்டி வளர்த்துக்கொண்டு வருநாளில் ஒருநாள் அவர் தனதுஹிருதயத்தில் படிந்திருக்கும் கல்வி ஞானம், நற்குணம், முதலியவைகளை அக்குழந்தைக்குப் பற்றவைப்பவர்போல் அக்குழந்தையை மார்போடணைத்துக் கொண்டு ஜகத் குரு ஸ்ரீ காமகோடி பீடாதிபர்களான விசுவாதிகேந்திர ஸரஸ்வதியவர்களிடம் சென்றார். ஜகத்குரு ஸ்வாமிகள் அக்குழந்தையிடமிருக்கும் சகலஜீவரக்ஷகமான நற்குறிகளையறிந்து தனக்குப் பின் பட்டத்துக்கு இக்குழந்தையே தகுந்ததென்று நிச்சயித்து கேசவபாண்டுரங்கயோகியைப்பார்த்து, ஓ விப்ரசிரேஷ்டா! இக்குழந்தை யாருடையது என்றுவினவினர், அதற்கவர் ஜகத்குருவே தங்களுக்கு நான் செய்துவரும் பரிசரிய்யையின் புண்ணியபலமே

இக்குழந்தை ரூபமாக பிறந்ததென்றூர். ஜகத்குரு இப்புத்திரனை எனக்கு கொடுப்பீரோவென்றூர். யோகியும் அப்படியேஎன்று ஜகத் குருநாதன்கையில் கொடுத்துவிட்டார். ஜகத்குருமகிழ்ந்து குழந்தையைவாங்கி தன் திருக்கரங்களால் தடவி ஆசீர்வதித்து இன்றுமுதல் ஸ்ரீ மடத்துக்குழந்தையாக பாவிக்க வேண்டியதென்று யோகியின் கையில் கொடுத்தார்.

யோகியும் குழந்தையை யெடுத்துக்கொண்டு விடுசென்று நடந்த சங்கதிகளை தனது மனைவிக்குத் தெரிவிக்க அவளும் மனமகிழ்ச்சியடைய தம்பதிகள் குழந்தையுடன் சுகமாயிருந்தார்கள். குழந்தைக்கு 5-வதுவயதில் அக்ஷராப்பியாசம் செய்வித்து 6-வதுவயதில் உபநயனம் நடத்தி வேதசாஸ்திரங்களைக் கற்பித்தார்கள். புருஷோத்தமன் பதினாறு வயதுக்குள் சகல வேதசாஸ்திரங்களையும் கற்றுணர்ந்து அதன் சாரமாகிய பகவந்நாம ஸங்கீர்த்தனமே இக்கலியுகத்தில் சகல ஜீவராசிகளும் கடைத்தேற முபாயமென்றறிந்து தாரகமாகிய ஸ்ரீ ராமநாமம் செய்யத் தொடங்கினான். பிரதிதினமும் இலக்ஷத் தெண்ணுயிரம் நாமம் செய்துவந்தான். அவ்வூரில் இவனுடன் வேதசாஸ்திரங்கள் ஒதிவந்த இவனது பரமமித்திரனுகிய ஞானஸாகரனென்ற பிராமணச்சிறுவன் இவனைப்பிரியாமல் இவனுடன் ராமபஜனம்செய்துவந்தான். இருவரும் ஜகத்குரு ஸ்ரீ மடத்துக்குப் பிரதிதினமும் சென்று அவருக்குப் பணிவிடைசெய்வது வழக்கம்.

இப்படியிருக்கும் காலத்தில் ஜகத்குரு விசுவாதிகேந்திரஸ்வாமிகள் கங்காஸ்நானம் செய்ய விரும்பி ஸ்ரீ காசிக்ஷேத்திரம்சென்று அவ்விடத்தில் வசித்துகொண்டிருந்தார். கொஞ்சநாள் கழித்து புருஷோத்தமனும் ஞானஸாகரனும் ஜகத்குருநாதனைத் தரிசிக்க காசிக்குப் புறப்பட்டார்கள். புற

ப்படும்போது தங்களிருவரில் யாருக்காவது நடுவழியில்மா ணம்நேர்ந்தால் மற்றவன் கங்கையில்விழுந்துபிராணனை இழந் துவிடுகிறதென்று அதிகஸ்நேகதர்மத்தால் உறுதிசெய்துகொ ண்டார்கள். பிறகு இருவரும் காசிக்குப்போய்க் கொண்டிரு க்கையில் நடுவழியில் ஞானசாகரன் பரகதியடைந்துவிட் டான். அதனால் புருஷோத்தமன் மிகவும் துயரங்கொண்டு காசிக்ஷேத்திரத்தில் வசித்துகொண்டிருக்கும் குருநாதனி டம்சென்று நமஸ்கரித்து தனக்கும் பரமமித்திரனாகிய ஞா னசாகரனுக்கும் ஏற்பட்ட பிரதிக்ஞையையும், நடுவழியில் நேர்ந்த அவனது மரணத்தையும் அதற்காக தான் கங்கை யில் பிராணனை யிழக்கப்போகிற சங்கதியையும் தெரிவித் தான். இதைக்கேட்ட ஜகத்குரு திடுக்கிட்டு புருஷோத்த மனிடம் வைத்திருக்கும் அன்பினாலும் அடுத்த பட்டத்து க்கு யோக்கியமான வேறொருவர் இல்லாததினாலும், இவனை மரணத்தினின்றும் தடுப்பதற்கு உபாயத்தை ஆலோசித்து பின் வருமாறு சொல்லுகிறார். "புருஷோத்தமனே எனதுஸ் தானத்தில் உன்னை ஸ்தாபிக்கவேண்டியே உன்பாலன்புவை த்துவளர்க்கச்செய்தேன். சகல சாஸ்திரங்களையும் கற்பித் தேன் உன் பிராணனை யிழந்தால் நான் என்னசெய்வேன்! சத்தியம் தவறாதிருக்கவும் உயிரை மாய்த்துக்கொள்ளாமலி ருக்கவும், உபாயமொன்று சொல்லுகிறேன் கேள்.

நீ சன்னியாசம் செய்துகொள்வாயாக. அப்படிச்செய் துகொண்டால் ஜென்மம் வேறாகுமென்று சாஸ்திரம் சொல் லுகிறது. அதற்காக ஒரு கதை சொல்லுகிறேன்; பூர்வம் ஸ்ரீராமபிரான் தர்மராஜனோடு சில ரகஸ்யம் பேசவேண்டிய தற்காக ஏகாந்த ஸ்தலத்துக்கேகும்போது, தம்பியாகிய லக்ஷ மணனை கிருகதுவாரத்தில் நிருத்தி லக்ஷ்மணா! நீ யார்வந்தா லும் உள்ளே விடக்கூடாது. ஜாக்கிரதையாயிரு. தவறினால்

உனது சிரசைக்கொய்துவிடுவேன் நிச்சயம்; என்று சொல்லி விட்டு ஏகாந்தமாய் தர்மராஜனுடன் பேசிக்கொண்டிருந்தார். அச்சமயத்தில் பிரளயகால ருத்திரனுக்கு தன் கோபத்தில் பரமாணு பிரமாணம் பிக்ஷையாகவளிக்கும் தூர்வாச மகா முனி அங்கு வந்து ராமனை தரிசிக்கவேண்டுமென்றார். உடனே லக்ஷ்மணன் முனியைவணங்கி நின்று ஆலோசிக்கிறார். இம் முனிபுங்கவரை உள்ளே போகவொட்டாமல் தடுத்தால் அக் கணமே நீறுக்கிவிடுவார். போகவிடுவோமென்றால் தலைக்கு நாசம் வந்துவிடும். என்னசெய்வேன். அயோத்தியில் சகல ஜீவராசிகளும் நாசம் அடைவதைக் காட்டிலும் நானொருவன் பிராணனை யிழப்பதே நலம் என்று மௌனமாயிருந்துவி ட்டார்.

தூர்வாஸ மகரிஷியும் தடையின்றி உள்ளேசென்றார். அப்பொழுது தர்மராஜன் மறைந்துவிட்டார். ஸ்ரீராமன் மக ரிஷிக்கு மரியாதை செய்தனுப்பிவிட்டு லக்ஷ்மணனையழை த்து மிகவும் கோபத்துடன் அடா லக்ஷ்மணா! நீ எனது ஆக்கி னையைக்கடந்து தூர்வாஸமகரிஷியை ஏன் உட்செல்ல விட் டாய் என்று வினவ, லட்சுமணன் அண்ணா! நான் மகரிஷி யைத்தடுத்தால் அவர் கோபாவேசங்கொண்டு அயோத்தியை ச்சாம்பலாய் எரித்துவிடுவாரல்லவா அயோத்தியிலுள்ள ஜீவகோடிகள் எல்லாம்நாசமடைவதைக் காட்டிலும் எனது பிராணன் தங்கள் கையால் ஒழிவது மிக நலமென்று மௌன மாயிருந்துவிட்டேன் என்று சொல்லி, கூர்மையான கத்தி யை இராகவன் கையில் கொடுத்துக் கழுத்தை நீட்டினார். அப்பொழுது ராகவன் மனமுருகி, லட்சுமணா! இவ்வளவு ஜீவகாருண்யமும் நீதியுமுடைய உத்தமனாகிய உன் சிரசை எவ்விதம் அறுப்பேன்! எனது சத்தியத்தை எவ்விதம் துறப்பேன்! உந்தனையிழந்து நானும் பூமியில் இருப்பேனோ!

என் கண்மணியே! பாவியேயான் என் செய்வேன். என்று புலம்பித் தவித்து சோகமிகுந்து மயங்கி விழுந்து ஒருவாறு தெளிந்து தனது சத்திய மொழியைக்காப்பற்றப் பரிகாரந் தேடி அருமைத்தம்பியைப் பார்த்துச் சொல்லுகிறார்.

லட்சுமணா! உனது தலையையறுப்பதனால் உண்டாகும் பயன் உன்னை நான் மறுபடியும் பாராமலிருப்பது தானே? உனது முகம் இனி எனது கண்களில் படாமலிருக்கும்படி எவ்விடத்திலாவது நீ உயிருடன் வசித்துக்கொண்டிருக்க கடவாய் என்றார்.

அதுபோல் நீயும் ஸந்நியாஸம் செய்துகொண்டால் ஜன்மம் வேறாகும் என்றுரைத்த ஜகத்குருவாக்கியத்தைக் கேட்ட புருஷோத்தமன் அதற்கிணங்க, ஜகத்குரு அவருக்கு ஸன்னியாசம் கொடுத்து ஸ்ரீபோதேந்திர ஸரஸ்வதியென்று பெயரிட்டு ஸ்ரீமடத்துக்கு 58-வது வயதுக்கு இளவரசாக்கி மந்திரோபதேசம் செய்து மகிழ்ந்தார். பிறகு ஜகத்குரு, ஸ்ரீ போதேந்திர ஸ்வாமிகளைப் பார்த்து போதேந்திரா? நீ தட்சிண தேசத்துக்கேகி நமது காஞ்சிபுரமடத்திலிருந்துகொண்டு இக்கலியில் சகல புருஷார்த்த சாதனமாகிய பகவன்னாம கீர்த்தன கிரந்தங்களைச்செய்வாய். நீ போகும்போது மார்க்கத்தில் ஜகந்நாத க்ஷேத்திரத்தில் லக்ஷ்மீதர கவியென்ற மகா வித்துவான் இயற்றிய நாமகௌமதீயென்ற கிரந்தம் உனக்குக்கிடைக்கும்.

அதைமூலமாகவைத்துக்கொண்டு இலட்சம் கிரந்தங்களைச் செய்துமுடிப்பாய்யாக என்றார். பிறகுபோதேந்திர ஸரஸ்வதி சரணரும் ஆசார்யஸ்வாமிகள் ஆக்கினைப் பிரகாரம் ஸ்ரீ காசிப்பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுக் கொஞ்சநாளில் ஜகந்நாத க்ஷேத்திரத்திற்குவந்து சேர்ந்தார். அன்றிரவு ஜகந்நாத பகவானைத் தரிசித்து லக்ஷ்மீதரகவி வீட்டுத்திண்

ணயில் சயனம் செய்துகொண்டார். நடுராத்திரியில் ஓர் பிராமணன் அவ்விட்டின் வாசற்கதவைத்தட்டி, லக்ஷ்மீதர கவியின் குமாரனுகிய லக்ஷ்மீகாந்தகவியைக் கூப்பிட்டார். உடனே லக்ஷ்மீகாந்தகவியும், கதவைத்திறந்து யார் ஐயா வென்றுர். பிராமணன் ஒரு பிராயச்சித்த விஷயம் கேட்க வந்தேனென்றுன். அவரும் கேளுமென்றுர். உடனே பிராமணன் ஸ்வாமி நானிருக்குமிடம் தக்ஷிணதேசம் ஐந்து வருஷத்துக்குமுன் எனது பாரியையுடன் காசியாத்திரைக் குச் சென்றேன்.

மார்க்கத்தில் ஓர் ஊரில் ஒருநாள் இராத்திரி தங்கியிருந் தேன். அந்தஊர் மிலேச்சர்கள் வசிக்குமிட மென்பதெனக் குத் தெரியாது. தர்மச்சாவடியில் சயனித்து நித்திரைசெய் யும்போது ஓர்மிலேச்சன் எனது பத்தினியைத் தூக்கிக் கொ ண்டு போய்விட்டான். காலையில் நான் விழித்துக்கொண்டு பா ர்க்கும்போது பத்தினியைக் காணேன். மிலேச்சன் தூக்கிக் கொண்டு போனது அப்போது எனக்குத் தெரியாது. மூன்று நாள் வரையில் அவ்வூர் முழுவதும் தேடி அவளைக்காணுமல் பரிதபித்து நான் மட்டும் காசியாத்திரை செய்து சிலநாள் கழித்து அவ்விடமிருந்து திரும்பி வருகையில் அவ்வூர் நதிக் கரையில் வந்து உட்கார்ந்தேன். அச்சமயத்தில் தெய்வா தீனமாய் அவள் கையில் குடத்தை யெடுத்துக்கொண்டு தண்ணீர் எடுக்க அவ்விடம்வந்தாள். அவள் என்னை உற் றுப்பார்த்து நாதாவென்று அழுதாள். அவளை எனக்கு இன்னுளென்று தெரியவில்லை. அவள் ஆடை ஆபரணம் முதலானவைகளைப் பார்க்கும்போது மிலேச்சஸ்திரீயென்று தோன்றியது. காதுகளில் வரிசையாக துவாரங்கள் இடப் பட்டிருந்தன. நான் அவளை நோக்கிப் பெண்ணே! நீயார் என்னைக்கண்டு ஏன் அழுகிருயென்று வினவினேன். அதற்

கவள் நாதா ! நான் தங்கள் பத்தினியல்லவா? காசியாத்திரை செய்யும்போது நாமிருவரும் இவ்வூர் தர்மச்சாவடியில் தங்கி நித்திரை செய்யும் வேளையில் தங்களுக்குத் தெரியாமல் மோசடியாய் ஓர் மிலேச்சன் என்னைத் தூக்கிக்கொண்டுபோய் கெடுத்துவிட்டான். ஆடையாபரணம் போசனம் எல்லாம் அந்த ஜாதி வழக்கப்படியாயிற்று. நான் என்ன செய்வேன்; தெய்வாதீனமாய்த் தங்களைக் கண்டேன், இனி நான் தங்களுக்குதவாமல் போனாலும், தங்களை சதாகாலமும் தரிசித்துக்கொண்டு தங்களுடன் இருந்து என் வாழ்நாளைக் கழிக்கிறேன். தயைசெய்து மிலேச்சன் வருமுன் என்னை அழைத்துக்கொண்டு இதோ தெரிகிற காட்டுக்குள் நுழைந்து ஓடிப் போகப் பிரார்த்திக்கின்றேன் என்றாள்.

அது கேட்டு நான், பத்தினி, உன்னைப்போன்ற சத்யவதியை நான் எங்கும் கண்டதில்லை. உன்னை மிலேச்சன் தூக்கிக்கொண்டு போனது எனக்குத்தெரியாது. ஊரெங்கும் தேடினேன். உன்னைக்காணாமல் வாடினேன். இப்போது தெய்வாதீனமாய் உன்னைக்கண்டேன். உனதிஷ்டப்படி என்னோடிருப்பாயென்று சொன்னேன். பிறகு நாங்களிருவரும் ஒருவருக்கும் தெரியாமல் காட்டில் நுழைந்து கஷ்டப்பட்டு இந்த ஜகந்நாதக்ஷேத்திரம் வந்து சேர்ந்தோம். தங்களை பிராயச்சித்தம் விதிப்பவரென்று கேள்விப்பட்டு இவ்விடம் வந்தோம். இதோயிருப்பவள் மிலேச்சனால் கெடுக்கப்பட்ட எனது பத்தினி, இவளை என்னுடன்சேர்த்து கொள்ள வழியுண்டா என்று வினவினான். அதற்கு லக்ஷ்மீகாந்தகவி ஹே பிராமணா! ராம ராம ராமவென்று மூன்று தடவை அவளையுச்சரிக்கச்செய்து சேர்த்துக்கொள் என்றார்.

அதை அவ்விட்டு நடையில்படுத்திருந்த லக்ஷ்மீகாந்தகவியின் தாயார் புத்திரனைக் கூவி புத்திரா! இப்படிப்பட்ட!

பாபங்களுக்கு ஒருதடவை ராமாவென்று சொன்னால் போது மென்று உனதுபிதாசொல்ல நான் கேட்டிருக்கிறேன். நீ மூன்று தடவை உச்சரிக்கச் சொல்லுகிறாயே என்றாள். இவைகளைக் கேட்டுக்கொண்டிருந்த ஜகத்குரு போதேந்திர ஸ்வாமிகளவர்கள் லக்ஷ்மீகாந்த கவியையழைத்து இதற்காதாரமான கிரந்தமுண்டோவென்று கேட்டார்கள். லக்ஷ்மீகாந்த கவியும் ஸ்வாமிகளவர்களை நமஸ்கரித்து தன்னிடமிருக்கும் தனது பிதாவியற்றிய "நாமகௌமுதி" என்ற கிரந்தத்தை எடுத்துக்கொடுத்தார்.

ஸ்வாமிகளவர்கள் ராத்திரியே தீபவெளிச்சத்தில் நாமகௌமுதி கிரந்தத்தை முற்றிலும் பார்த்து மகிழ்ந்து இந்தக் கிரந்தப்படி பகவன்னாமகீர்த்தனத்துக்கு மகிமையிருந்தால் இந்த ஸ்திரீ ராமாவென்று உச்சரித்து இக்குளத்தில் ஸ்நானம் செய்யப்படட்டும் உடனே அவள் உடுத்திக்கொண்டிருக்கும் கறுப்புவஸ்திரம் வெளுப்பாக ஆகவேண்டும். மிலேச்சசின்னங்களாகிய காதுகளிலுள்ள துவாரங்கள் மறையவேண்டும். நெற்றியில் குங்குமப்பொட்டு உண்டாக வேண்டும். அப்படியானால் நாமோச்சாரணத்துக்கு மகிமையுண்டென்று சொல்லலாமென்றார். அதற்கு லக்ஷ்மீகாந்தகவி சம்மதித்து மறுநாட் காலையில் அவ்விடத்திலுள்ள ஜகந்நாததீர்த்தத்தில் அந்தஸ்திரீயை ராமநாமத்தை உச்சரித்துக்கொண்டு ஸ்நானம் செய்யச்சொன்னார்.

ஸ்வாமிகளவர்களும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அந்தஸ்திரீ ராமாவென்று குளத்தில் மூழ்கி எழுந்த மாத்திரத்தில் வெளுத்தவுடை யுடையவளாய் நெற்றியில் குங்குமத்துடன் காதுத்துளைகளும் மறைந்து எழுந்தனள்! அதுகண்டு சகல ஜனங்களும் ஆச்சரியமடைந்தார்கள்! அன்று அப்பெண்மணிகையினால் சமையல் செய்யச்சொல்லி

ஸ்வாமிகளவர்கள் பிக்ஷை செய்தார்கள், பிறகு தம்பதிகளை யாசீர்வதித்து அனுப்பிவிட்டு போதேந்திர ஜகத்குரு சுவாமிகளும் காஞ்சீபுரியிலுள்ள தமது மடத்துக்குவந்து சேர்ந்தார்கள். பிறகுஉலகத்துக்கு க்ஷேமம் உண்டாகும்படி அந்த நாமகௌமுதீ கிரந்தத்தை மூலமாகவைத்துக்கொண்டு ஜகதீசுவர நாமக்கிரந்தத்தை இலக்ஷம் சிறந்த ஸங்கியையுள்ள எட்டு புஸ்தகங்களாக இயற்றினார்கள்.

அவைகளின் பெயர் 1. நாமாமிர்தரஸோதயம், 2. நாமரஸாயனம். 3. நாமஸூர்யோதயம். 4. நாம தரங்கம். 5. நாமார்ணவம். 6. ஹரிஹரபேததிக்காரம். 7. ஹரிஹராத்வைத பூஷணம். 8. மூர்த்தப்பிரம்ம விவேகம். இவைகளை இப்படி நாமசித்தாந்த கிரந்தங்கள் செய்து தனது குருவின் வரவை எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கும்போது விசுவாதிகேந்திர ஸரஸ்வதி சரணும் காஞ்சீபுரிக்கு வந்து சேர்ந்தார். கிரந்தங்களைப் பார்த்து மகிழ்ந்தார்.

சிலநாள் கழித்து ஸ்வாமிகளவர்களிருவரும் இராமேசுவர யாத்திரைக்குப் புறப்பட்டார்கள். கெருடநதி தீரத்தில் விசுவாதிகேந்திர ஸ்வாமிகளவர்கள் சித்தியடைந்து அவ்விடத்தில் சமாதியாயிற்று. பிறகு போதேந்திர ஜகத்குரு அவர்கள் 59-வது பட்டம் பீடாரோஹணம் செய்து தனது குருவின் மனோரதமாகிய இராமேசுவர யாத்திரையைப் பூர்த்தி செய்து திரும்பி வருகையில் மத்தியார்ஜுனமென்னும் சிவக்ஷேத்திரமாகிய திருவிடைமருதூருக்கு அருகாமையில் இருக்கும் ஸகஜிராஜபுரமென்ற திருவிசநல்லூரில் பரமேசுவராவதார ரூபாளாய் விளங்கும் ஸ்ரீதர வேங்கடேச ஐயா அவர்கள் வசிப்பதையறிந்து அவர்களுடன் சிலநாள் வஸிக்க எண்ணங்கொண்டு திருவிடைமருதூர் க்ஷேத்திரத்தில் இருந்துகொண்டிருந்தார்கள். ஸ்ரீதர வேங்கடேச ஐயா

அவர்களும் ஸ்வாமிகளவர்களைக் கண்டு நமஸ்கரித்து தான் செய்திருக்கிற ஆக்கியாஷஷ்டி முதலாகிய கிரந்தங்களைக் காட்ட அவைகளை ஸ்வாமிகளவர்கள் பார்த்து மகிழ இருவரும் அவ்விடத்தில் பகவன்னும கீர்த்தனம் செய்துகொண்டிருந் தார்கள். பிறகு பெரம்பூர் என்ற கிராமத்திலுள்ள பக்த சிரோன்மணிகளான பிராமணர்கள் ஸ்வாமிகளவர்கள், ஐயா அவர்கள் மகிமையைத் தெரிந்து அவர்களைத் தமதூரில் சில நாள் வசிக்கும்படி பிரார்த்திக்க ஸ்வாமிகளவர்களும் ஐயா அவர்களும் பெரம்பூரில் விஜயம் செய்து கொஞ்சநாள் வசித்தார்கள். ஒருநாள் ஓர் கிருஹத்தில் ஸ்வாமிகளவர்களுக்கு பிக்ஷை நடக்கும்போது அவ்வீட்டிலுள்ள ஓர் ஊமைப் பையன் ஸ்வாமிகளவர்கள் இலையில் பரிமாறியிருந்த பக்ஷணத் தில் கொஞ்சம் வேண்டுமென்று கையை நீட்டவும் ஸ்வாமிக ளவர்கள் கொஞ்சம் பக்ஷணமெடுத்து அந்தப் பையன் கை யில் கெடுக்கவும் அதை அந்த ஊமைப்பையன் வாங்கிவாயில் போட்டுக்கொண்டு இன்னும் கொஞ்சம் வேண்டுமென்று பேசத்தொடங்கினன்.

ஸ்வாமிகளவர்கள் ஆச்சரியப்பட்டு இராமா வென்று சொல்லக்கூடாதா வென்றார்கள். உடனே அந்தப் பையன் இராம பஜனம் பண்ணத்தொடங்கினன். அது கண்டு அவ் வூரிலுள்ள சகல ஜனங்களும் ஆச்சரியமடைந்து ஸ்வாமிகள வர்கள் மகிமையை மிகக் கொண்டாடினர்கள். பிறகு ஸ்வா மிகளவர்கள் அவ்வூரில் ஒரு ஆஞ்சநேயஸ்வாமியை பிரதிஷ் டைசெய்துவிட்டு பூவபுரியிலுள்ளாரைத் துன்புறுத்திய பிர மராக்கதனிருந்த அரசமரத்தை வெட்டி அவ்விடத்தில் ஸ்ரீ ராமமந்திரமமைத்து இராம பிரதிஷ்டை செய்து அவ்வால யத்தில் அப்பிரமராக்கதனையும் ஆஞ்சநேயரையும் காவலாக வைத்து அவ்வூரிலுள்ளோரைக் காப்பாற்றி அங்கு சிலநாட்க

ளெழுந்தருளி மறுபடியும் மத்தியார்ஜுன க்ஷேத்திரம் வந்து சேர்ந்தார்கள். அவ்விடத்தில் வசித்துக்கொண்டிருக்கும நாளில் ஒரு நாள் சமீபத்திலுள்ள கோவிந்தபுரத்தில் பிக்ஷை செய்யப்போனார்கள். அவ்விடத்தில் தான் சித்தியடையும் காலம் இதுதானென்றறிந்து கோவிந்த ஸம்யமீ யென்றவரைத் தனது பீடத்திலிருந்த சாலிவாகனசகம் 1614 பிரஜோத்பதி-ஸு ப்ரோஷ்டபதமாசம் பூர்ணிமை திதியில் சித்தியடைந்து பிர்ம்ம ஸ்வரூபமாய் விளங்க கோடிகோடி பக்த ஜனங்கள் சேர்ந்து தாரையாய் நாம கீர்த்தனம் செய்தார்கள், அவ்விடம் வீரசோழன் ஆற்றங்கரையில் சமாதியமைத்தார்கள் தேவாகள் புஷ்பமாரி பொழிந்தார்கள், மகாபிஷேகம் நடந்தது. அந்த அதிஷ்டான மடத்தில் பிரதிவருஷமும் குரு ஆராதனம் உத்ஸவம் பிரபல்யமாய் நடந்துவருகிறது. அந்த ஸமாதியை தரிசிப்போருக்கும் ஸ்வாமிகளவர்கள் கிரந்தங்களைப்படித்து அதன்படி நாம கீர்த்தனம் செய்வோருக்கும் ஜகத்குரு ஸ்வாமிகளவர்கள் சகல புருஷார்த்தங்களையுமளிப்பாராக.

பரமஹம்ஸ ஸதாசிவேந்திரர்.

இம்மஹானது ஜன்மபூமியை யவ்வளவு நிர்த்தாரண மாகச் சொல்லமுடியாதாயினும் சிலர் சொல்லுவதைக்கொண்டாராய்ந்தால், கும்பகோணத்திற் கடுத்த திருவிசநல்லூர் என்று தெரியவருகிறது. மிக்க பண்டித பரம்பரையிலுதித்தவர். சுவாமிகளவாளுடைய பாலியப்பருவத்திலேயே ஸமிஸ்கிருதத்தில் மிகப்பாண்டித்தியத்தையும் அக்காலத்தில் ராஜபாஷையிலிருந்த ஆந்திரத்தையும் செவ்வையாய் கற்றிருந்தார்கள். இவர் ஓர் மஹா பண்டிதரின் புத்திரர். அரசன் இவருடைய பாண்டித்தியத்தைக்கண்டு தம் அரண்மனை வித்வானாகவைத்துக் கொள்ளத் தன்னால் கூடியமட்டும் பிரயாசைப்பட்டும் முடியவில்லை. பாலியம் முதலே விரக்திமேற்பட்டு எப்பொழுதும் ஏகாந்தத்திலேயே இருப்பது வழக்கமாம். ஒருவரோடும் அதிகமாகப் பேசுவதில்லையாம். எவரைக்கண்டாலும் மிக்ககாருண்ணிய திருஷ்டியாக நோக்குவது வழக்கமாம். தாம் துறவியாய் வெளிக்கிளம்பவேண்டுமென்று மனத்திலிருப்பினும், தனது தாய் தகப்பனது உத்திரவைப் பெற்று செல்லவேண்டுமென்று காத்துக்கொண்டிருந்தார். ஒருநாள் தாய் இவர் ஒன்றிலும் பிரவிருத்தியாதுகண்டு சிறுவன் கற்றகல்வியை விணுக்குவதிற் பயனென்ன, அரசனது ஸபைக்குச் செல்க என்றுரைத்தாள். அதைக்கேட்டபண்ணல் அம்மா? அங்கு போய்நான் செய்யவேண்டுவதொன்றுமில்லை. இவ்வாழ்க்கை நீரிற்குமிழிபோல் நிமிஷத்திலொழிந்துவிடும். ஆயுள் சூரியனது போக்குவரத்தால் சென்றுகொண்டேயிருக்கிறது. ஒவ்வொருவரும் தினந்தோறும் செய்தகாரியத்தையே செய்துகொண்டிருக்கிறார்கள் நோக்குங்கால், ஜன்மமெடுத்தது பாலியம், கௌமாரம், யௌவனம், வார்திக்கியம், ஜரை, விபத்து, வியாதி, முதலியவைகள் ஒவ்

வொன்றாகவந்து அவ்வப்பீடைகளைச் செய்கின்றன. இவை களனைத்தும் முக்கியமென்றறிந்திருந்தும் சர்வ ஜனங்களும் மோஹமெனும் பைத்தியம் பிடித்தலைகிறார்கள். அந்தோ? இத்துக்கஜன்மத்தை இன்றே யொழிக்க வழிதேடவேண்டும். தந்தை தாய் தாரம் இவையனைத்தும் சந்தைக்கூட்டமன்றோ. என்று அநேகவிதமாக வைராக்கியமாக உத்தரமுரைத்தனராம். அதைக்கேட்ட தாய், தந்தையிடத்துக்கூற, அவர் விவேகியானதால், பாராட்டாது இருந்தனராம். இப்படிச் சிலநாள் செல்ல ஒரு நாள் நமது சுவாமி மௌனமாய் தியானத்திலுட்கார்ந்திருக்க, அதைக்கண்ட தாய், குழந்தாய்! இங்ஙனமிருப்பதைப் பார்க்கிலும் சந்நியாசம் பண்ணிக் கொள்ளலாமென்று வேடிக்கையாகக்கூறினள். அதைக்கேட்ட எம் குருமூர்த்தி சமயம் வாய்த்ததென, ஆம் அங்ஙனமே, அதற்கே காத்திருந்தேனென வெகு ஆனந்தத்துடன் பிரேஷோச்சாரணஞ் செய்து எக்யோபவீதத்தையும் வஸ்திரங்களையு மெறிந்து விட்டு அவதூதராய்க் கிளம்பிவிட்டார். அதைக்கண்ட தாயும் தகப்பனும் மிக்க வருந்தியழைத்தும் வராமல் மாதாவினுஞ் ஞையை எதிர்பார்த்திருந்தேன், அடைந்தேன், இனிச்செல்வேன் என்று வேறு கிராமங்கட்குச் சென்றனர். அப்பொழுது கண்டவரனைவரும் இவரை நவீன சுகர்தாம் வந்தனரோவென மருண்டு உபசாரங்களைச் செய்தார்கள். பிறகு குருவை நாடி அநேக விடங்கள் சென்றும் கிட்டாது, பிறகு பரமேசுவரனே திருவுருக்கொண்டெழுந்ததுபோல் மவதரித்திருந்த ஸ்ரீ தத்பரமசிவேந்திர சுவாமிகளவாளிடத்திற்சென்று பிரார்த்திக்க இவரது பரிபக்குவம் கண்டு, மிக்கமகிழ்ச்சியுடன் ஏகாக்ஷரத்தையுபதேசித்து வெகுநாட்சாயைபோல் தன்னிடத்திலேயே வைத்துக் கொண்டிருந்தார்கள். சதாசிவேந்திர சுவாமிகளவர்ளுடைய வாக்கருமையானதால் இவர்கள் ஆத்மவித்யா

விலாஸம், அத்வைதரஸமஞ்சரி முதலிய அருமையான பிர கரணங்களைச்செய்து குருஸந்நிதானத்தில் கூறுவது வழக்க மாம். ஒருநாள் குருஸ்வாமிகள் வேடிக்கையாக உன் வாய டையாதா வென்றார்கள். அன்றுமுதல் நமது வள்ளல் மௌ னமாக சமாதியிலேயே இருந்துவிட்டார். சமாதியிற்கடந்து விட்டதும் உன்மத்தம் பிடித்தவர்போல் வெளியில் ஸஞ்சரிக் கத்துடங்கினார் இங்ஙனம் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கும் கா லத்தில் சிலகௌடபிராம்மணர்கள் குருவினிடத்திற் சென்று உமது சிஷியருக்குப் பயித்தியம் பிடித்ததென்றார்களாம். அதைக்கேட்ட குரு அப்பயித்தியம் எனக்கு வரவில்லையே என துக்கப்பட்டனராம். அதன் தாத்பரியம்யாதெனில், அத் த்வைத வரிஷ்டபதவி தனக்கு வரவில்லையே என்று வருந்தி னர். பிறகு நமது சுவாமி வெகு இடங்களிற் சஞ்சரித்துக்கொ ண்டிருந்தனர், இவரது மஹிமையைக் கண்டு ஒரு பிரும்மசா ரிச்சிறுவன் இடைவிடாது பக்திசெய்துகொண்டு வந்தான். அதைக்கண்ட எம்பெருமான் அவரது பூஞே பரிபக்குவம் மோக்ஷத்திற் குறியதாகவில்லையெனக்கண்டு அவரது நாவை நீட்டும்படிச்செய்து சில அக்ஷரங்களை எழுதினார்களாம். அவன் உடனே ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, இவ்விரண்டிலும் மஹாவித் வானாக கவனஞ்செய்யும் சக்தியையடைந்தான். இப்பொழுது அப்பிராம்மணரது பரம்பரையு மிருக்கிறதாக கேள்வி. பிறகு நமது சுவாமிகள் புதுக்கோட்டைப் பக்கமுள்ள வனத்தில் சஞ்சரிக்கும் காலத்தில் மாட்டுக்காரப் பயல்களுடன்கூட காடுகளில் உட்கார்ந்திருப்பதுவழக்கமாம். அங்கிருக்கும் மா டுகளனைத்து மிவரைக்கண்டால் மகாபிரேமையாய் நாவினால் நக்குமாம். ஏனெனில் அகங்கார மொழிந்தவரானதால் ஸர்வ ஜீவர்களிடத்திலும் காருண்ணியம் பொருந்திருப்பதால் அ வைகளுமிவரிடத்தில் நன்றியைக்காட்டுகின்றன. ஒருநாள்

சிறுவர்கள் இவரைக் குளத்திலழுத்தி விட்டார்களாம். இவக்அக்கனமே மூன்று நாள் அங்கேயே இருந்தனராம். ஒருசமயம் ஓர் புலி வேகமாய் பாயவந்தும் இவரிடத்தில் வந்தவுடன் வாலையாட்டிக்கொண்டு நின்றதாம். இங்ஙனமநேகற்புதங்களுடன் அங்கிருப்பதைக் கேள்வியுற்றவரசன் இவரைத் தரிசிக்கப் பலமுறை முயன்றும் கூடாமல் ஒருநாள் தரிசனம் கொடுத்தனராம். அன்று அவன் இவரைக்கண்டதும் பரவசமாய்க் கீழே விழ்ந்து வணங்கி தனதரண்மனைக்கு வரவேண்டுமென்று வருந்தியழைக்க வரச்சம்மதப் படவில்லையாம். அதுகண்டவரசன் ஓர் பல்லக்கிற் தூக்கிவைத்து இருபுரத்துக்கதவையும் தாளிட்டு பல்லக்கை நடத்தி தானும் பாதசாரியாக அதைப்பிடித்துச்சென்று அரண்மனை வாயிலில் நின்றுகதவை திறந்தான் எம்பெருமானைக்காணேம். அரசன் மயங்கி பிறகு வெகுகாலம் கழித்து ஓர் முறை தெரிசனம் பெற்று, தனக்குப் புத்திரனில்லாக் குறையைச் சொல்லிக் கொண்டார். அதைக்கேட்ட வண்ணல் கொஞ்சம் நவநீதம் கொண்டுவரும்படிசெய்து அதை அரசனது மனைவியை தின்னச்செய்தனராம். உடனே கர்ப்பமுண்டாகி ஓர் புத்திரனைப் பெற்றாள். அவரை நவநீதத்தொண்டமான் என்று கூறுவதுமுண்டு. பிறகு சுவாமிகள் அரசனுக்கு நவராத்திரிகாலங்களில் பண்டிதர்கட்கு சம்மான மளிக்கும்படியாகவும் அரண் மனையில் தக்ஷிணமூர்த்தி பிரதிஷ்டைசெய்து பூஜிக்கும்படி ஆஞ்ஞையளித்ததுடன் ஒரு நாளைக்குறிப்பிட்டு அன்று தான் நெரூர் கிரமத்தில் ஸமாதி யடையப்போகிறதாகவும் அச்சமத்தில் வடக்கேயிருந்தொருவன் ஒரு லிங்கம் கொண்டுவருவான் அதை தனது சமாதியின் புரத்தில் பிரதிஷ்டை செய்து பூஜையை நடத்தும்படியாகவும் சொல்லிச்சென்றனர். இப்பொழுது அங்கு இன்றும் அவர் வந்து நின்றவிடத்

திலிருந்த பாதரேணுவை பூஜித்து வருகிறார்கள். பிறகு கரூர்பக்கத்திற் ஸஞ்சரிக்கும் காலத்தில் ஒருநாள் காவிரியில் வாய்க்கால் வெட்டினார்களாம் அதற்குள் சிறிது ரத்தம் தென்பட்டதாம். அதைப் பிரித்துப்பார்க்க சுவாமிகள் எழுந்து சென்றனராம். பிறகு ஒருநாள் ராத்திரியில் ஒரு களத்தின் வழியாக வருங்காலத்தில் ஓர் நெற்குவியலில் போய் சாய்ந்தனராம். அதுகண்டு தலையாரிகள் தடியையோங்க ஓங்கியபடியே மறுநாள் பத்து மணிவரையில் நின்றார்களாம். பிறகு மற்றவர்கள் வந்து சுவாமியைப்பிரார்த்திக்க சென்றனராம். பிறகு அவர்களும் கை சுவாதீனப்பட்டுச் சென்றார்களாம். ஒருநாள் சாலையில் ஸஞ்சரிக்கும் காலத்தில் கிராமத்தின் தலையாரிகள் தன் சைன்னியங்கட்கு விறகு கொண்டுபோக ஒரு ஆள் குறைய இவர் தலையில் ஓர் சுமையைவைத்து கையில் கயிரைக்கட்டி அழைத்துக்கொண்டு சென்றார்களாம். எல்லோரும் ஓரிடத்தில் விறகு சுமையைப் போட்டுவிட்டு இவரையும் போடும்படி கூற அங்ஙனமே போடவும் விறகனைத்தும் தீபிடித்தெறிந்துவிட்டதாம். இத்தகைய அநேக மஹிமைகளை செய்துகொண்டு சஞ்சரித்து தான் குறிப்பிட்ட காலத்தில் நெரூர் கிராமத்திற்கு வந்து சேர்ந்து ஸமாதியிலுட்கார்ந்தார்களாம். உடனே சுவாசமும் நின்றுவிட்டது வடக்குதிசையிலிருந்து ஒரு பிராம்மணன் நிருபதையின் சரணத்தைக்கொண்டுவர அன்தயவாள் கூறியபடி பிரதிஷ்டைசெய்து ஆராதனை நடந்துவருகின்றது. அவர்களுடைய குருசுவாமிகட்கு திருவெண்காட்டில் சமாதி இருக்கிறது. அதிலும் ஓர் பெரிய தேவாலயம் கட்டப்பட்டிருக்கிறது.

இம்மாதிரியான மகான்களுடைய அவதாரத்தினாலேயே இப்பொழுது இன்னும் நமது நாட்டில் மஹிமைகள் குறையாமலிருக்கின்றன. இவர்களது காலம் சுமார் 200-வருஷத்திற்குள்ளாகவே இருக்குமென்று தோன்றுகிறது.

திருவிசநல்லூர்.

ஸ்ரீதர் வெங்கிடேசார்ய ரென்னும் ஐயர்வாள் சரித்திரம்.

திருச்சோற்றுத்துறை.

மகா-ா-ா-ஸ்ரீ முத்துகிருஷ்ணய்யர் இயற்றியது.

ஆசிரிய விருத்தம்.

சீர்கொண்ட பூவுலகி னன்னெறிகளுயரவுந்
 தீயகவி வலியயரவுஞ்
சிவநன்பர் மகிழவும் பவவம்பர் கவிழவுந்
 தேவருரை வடமொழியினுட்
செப்பரிய பற்பல சுலோகங்கள் செய்துதான்
 சிந்தனைசெய் துலகூட்டியுஞ்
சிவ சிவா சிவா சிவாபசியினு லென்வயிறு
 தீயுதே என்றலற்றும்
வார்கொண்ட கையுடைய நீசர்க்கு மரபிநெறி
 மதியாது பூததயையும்
மாதேவ நாமப்ரதாவமும் மேற்கொண்டு
 வாயிலே யமுதளித்தும்
மனையிலே தன்றந்தை புண்யதிதி யுண்டிக்கு
 வாராது பழியுரைத்த
மறையவர்களுளரண வரநதியை பொருதுதியில்
 வரவழைத்ததின் மூழ்கியும்
பார்கொண்ட சோளநாடென்னு மின்மார் பிற்ப
 ணித்த வெண்பூத்தா ரெனப்
பரவிவரு முபயகாவிரி நடுவின் மங்கலப்
 பைம் பொண்ணியென்ன மின்னிப்
பால்பெருகு தாய் கொங்கை யென்னவள மீந்தருள் செய்
 பழயதிருவிசை நலூரிட்

பார்ப்பனர் குலக்கடற் கொருமதியெனச்சுகம்
பல்கி நெடுநாளிருந்துங்
கார்கொண்ட கந்தரற்கினிய கார்த்திகைமதி
க்ககனிந்து சேருநாட்டன்
கனபுனித திதியெனக்கட லுலகர் புகழவே
கைலாய முற்ற குருவாங்
கருதுவரமுதவ வல வேங்கடேசாரியன்
கமழ்திவ்ய துப்யசெய்யக்
கமலபத நமதிதய தடமதிலரும்பவே
கருதி வந்தனை புரிகுவாம்.

மலர்மகளருள்பெறும், மகீசுரபுரமெனும், பட்டணத்தில் ஸ்ரீதர பத்மநாபார்யரென்றொரு ஆந்தர பிராமண திலகர் இருந்தார். அவருடைய கல்வி, சாமர்த்தியம், நீதி, நல்லொழுக்கம் முதலிய சிரேஷ்ட குணங்களை யறிந்த, அன்னகர் அரசன் அவரைத்தனக்கு மந்திரியாக்கிக்கொண்டு, மகிழ்ந்தரசாளும்நாளில், ஸ்ரீதர பத்மநாபார்யரும் தனது தர்மபத்தினியாகிய சுந்தரியென்ற உத்தமியுடன், புத்திரனில்லாதவராய், ஜகதீசனை யாராதித்துக்கொண்டு வரும் நாளில், சங்கர பக்தியே சகலருக்கும் முக்தியளிக்க மூர்த்தீகரித்து வந்ததுபோல் அவருக்கு ஓர் புத்திரன் பிறந்தான். அக்குழந்தைக்கு மாதாபிதாக்கள் ஸ்ரீதரவெங்கடேசார்யனென்று பெயரிட்டுச் சீராட்டிவளர்த்து வந்தார்கள். ஸ்ரீதர வேங்கடேசார்யரும் குழந்தைப் பருவமுதல், ஜகதீசுவர பக்தியில் சிறந்தவராய் ஆந்தரம், ஸம்ஸ்கிருதம் முதலிய பாஷைகளை நன்குய்க்கற்றுணர்ந்தார். மேலுமவர் உபநயனம் முடிந்தபின் நாலுவேதம் ஆறு சாஸ்திரங்களிலும் தேர்ச்சியடைந்து தெளிந்து அவைகளின் பிரயோஜனம் நாமகீர்த்தன பஜனம் என்று தீர்மானித்து தான் பிரதி தினமும்

லக்ஷம் சிவநாமஞ்செய்து வந்தார். பிறகு அம்பா என்ற அழகிய பெண்ணை மணம் புரிந்து அவளுடன் சுகமாக பரமேசுவரபஜனம் செய்துவருநாளில், பிதாவாகிய ஸ்ரீதரபத்மநாபார்யர் புத்திரனைப்பார்த்து, ஓ குமாரா! உனக்காக ஒன்பதுகோடி தனம் தேடிவைத்திருக்கிறேன்; ஆடையாபரணங்கள் அனேகம் சேர்த்துவைத்திருக்கிறேன்; அவைகளை நீயனுபவிக்காமல் சரீரமுழுவதும் நீறணிந்து, உருத்ராக்ஷமணிகளைச்சுமந்து சிவநேயர்களுடன் கலந்து, சிவபஜனம் பண்ணிக்கூத்தடிப்பது தர்மமா; நான் தேடிவைத்த பொருள்களையெல்லாம் தேசத்துக்கிடவா பிறந்தாய்; தவமிருந்து பெற்றபிள்ளை தாய்தந்தைக்குதவாதென்று தரணியிலிகழலாச்சுதே; இனியாவது சிவபஜனத்தை நிறுத்தித் தனசுகத்தை யனுபவிப்பாய் என்று போதிக்க, ஸ்ரீதரவேங்கடேச ஐயாவாளும் தனது பிதாவைப்பார்த்து 'ஐயா' (புரமதனே பரமதனே கரமதிநேயே ஸ்ம்ருதேன்ய காமின்யா, காமனயா காமனயா நாமநயாபேதயா ஸ்ரீயம்யாயா:) நினைத்தவுடன் கையில்கிடைக்குப் புரத்தையெரித்த உத்தமதனமிருக்க நீதியைத்துறந்த அந்த இச்சையினால் எந்த சம்பத்தை யடையப்போகிறீர் (இதன்கருத்து அழியாத தனம் சுலபமாகக்கிடைக்கும்போது அழிவுறும் தனத்தினால் பிரயோஜனமில்லையென்பது) என்று சொல்லிப்பின்னும் சொல்லுகிறார். என தன்புள்ள பிதாவே, பெண்டிர் மக்கள் தனம் வீடு பசு பூமி தான்யம் ஸம்பத்து ஆடை ஆபரணம் கல்விமுதலியவை, எமன் எதிர்வந்து நிற்கும்போது உதவுமா. சந்திரவேணியனை பஜனம் செய்வோர்க்குச்சகல பாக்கியமும் மோக்ஷமும் கிடைக்குமே என்றுபதேசிக்க, அவருடைய பிதாவும் மனமகிழ்ந்து வைராக்கியத்துடன் சிவநாம கீர்த்தனம் செய்யத்தொடங்கினார். பிறகு சிலநாள் கழித்து இவ

ரது மாதா பிதாக்கள் கயிலாயபதவியை யடைந்தார்கள்! பிறகு ஸ்ரீதரவேங்கடேச ஐயாவாள் தன் மனைவியுடன் சிவ நாமகீர்த்தனம் செய்துகொண்டு சிவனடியாருக்கு அன்னம ளித்து வருநாளில், அன்னகர் வேந்தன் ஐயாவாளைத்தன் ஸபைக்கு மரியாதையுடன் வரவழைத்து வணங்கி, ஸ்வாமி! தாங்கள் பிதாவின் உத்தியோகமாகிய மந்திரி வேலையை ஒப்புக்கொண்டு என்னைத்தன்யனுக்கவேண்டு மென்று பிரார்த்தித்தான். வைராக்கிய நிதியாகிய ஐயாவாளும், இராஜனை நோக்கி, அரசே! தாங்கள் கூறுவது உண்மையேர் ஆனாலும் நான் பரமசிவ கிருபையை ஒன்றைமட்டும் விரும்பினவன்; உலகமாயையில் என்னைக்கட்டுப்படுத்துவது நியாயமல்ல; என்று மறுக்க, அரசன் அப்படியானால் தங்கள் திரவியங் முழுவதையும் அரண்மனையில் சேர்த்துவிடுவேன் என்று அவரை பயமுறுத்தினன். ஐயாவாள் வணக்கமாய் வேந்தனிடம் செலவு பெற்றுக்கொண்டு தனது கிரகம் சென்று நடந்த சங்கதிகளைத் தனது மனைவிக்கறிவித்து, அவளுடைய சம்மதத்தின்பேரில் தனது வீட்டிலுள்ள பொருள்களைக் கொள்ளைவிட நிச்சயித்து உடுத்த வஸ்திரத்துடன் மனைவியை யழைத்துக்கொண்டு தெரு வீதியில் வந்து நின்று, ஏழை ஜனங்களே! நீங்களெல்லோரும் எனது வீட்டில் நுழைந்து இஷ்டமான பொருள்களை எடுத்துக்கொண்டு போகக்கடவீர் என்றார். அந்தக்ஷணமே ஊர் ஜனங்கள் அவருடைய வீட்டில் நுழைந்து சகல பொருள்களையும் வாரிக்கொண்டு போனார்கள். ஸ்ரீதரவேங்கடேச ஐயாவாளும் தனது பொருள்கள் ஏழைகளுக்கு உபயோகமானதை நினைத்து, மிகவும் சந்தோஷமடைந்தார். உடனே தனது தர்மபத்தினியுடன் உஞ்சவிர்த்தி யென்ற, தண்டுலபிக்ஷை செய்துகொண்டு, தெருவீதியில் வருகிற ஐயாவா

களுடைய ஸ்திதியையறிந்த அரசன் ஓடிவந்து தண்டமிட்டுத் தான் செய்த பிழையை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டான். ஐயாவாளும் அரசனுக்கு அனுக்கிரகம்செய்து தனது பத்தினியுடன் அவ்வூரைவிட்டுப் புறப்பட்டு அனேக திவ்ய ஸ்தலங்களை தரிசித்துக்கொண்டு காவேரி தீரத்தில் விளங்கும் திருசிரபுரமென்ற ஸ்தலத்தை யடைந்தார். அவ்விடத்தில் உஞ்சவிர்த்தியினால் ஜீவனம் செய்துகொண்டு பிரதி தினமும் காவிரியில் நீராடி, நித்திய விதிகளை முடித்து, காலையில் மாதுர் பூதேசர் என்ற தாயுமான ஸ்வாமியையும், சுகந்த குந்தளாம்பாளையும், மத்தியானத்தில் ஸ்ரீரங்க க்ஷேத்திரமேகி இரங்கநாயகி மணாளனாகிய ஸ்ரீரங்க நாதரையும், சாயங்காலத்தில் திருவானைக்காவல் வந்து, அகிலாண்ட நாயகி சமேதராகிய ஜம்புநாதரையும் தரிசித்து வந்தார். மேலும், அவ்விடத்தில் மாதுர் பூதேசுவரசதகமென்று நூறு சுலோகங்களை இயற்றிப் பரமசிவனைத் துதிசெய்தார்.

சிலநாளைக்குப் பின்பு அந்த மகாத்மா திருவிடைமருதூர் க்ஷேத்திரத்துக்கு அருகாமையில் தஞ்சாவூர் ஸகஜி மகாராஜாவினால் பிராமணர்களுக்குத் தானமாக அளிக்கப்பட்டதாயும், மகா கவிகளும் மகா வித்வான்களும் நிறைந்த ஸகஜிராஜபுரமென்னும் திருவிசநல்லூர் அக்கிரகாரத்துக்கு வந்து சேர்ந்தார். அவ்விடத்தில் உள்ள வித்வான்களும் கவிகளும் ஐயாவாளிடத்தில் மிகவும் பிரீதியுள்ளவர்களாய் அவருக்குவேண்டிய ஒத்தாசைகளைச் செய்துவந்தார்கள். ஐயாவளும், அவ்வூரில் ஓர் கிருகத்தில் குடியிருந்து உஞ்சவிர்த்தியினால் ஜீவனம் செய்துகொண்டு, பிரதி தினமும் காலையில் அவ்வூர் அருகிலுள்ள கர்க்கடகேசுவர ஸ்வாமியையும், மாலையில் மத்தியார்ஜுனமேகி பிரஹத்குசாம்பாஸகித மகாலிங்க மூர்த்தியையும், தரிசித்துச் சிவநாம கீர்த்தனம்

செய்துவந்தார். இப்படியிருக்கையில் அவ்வூரிலுள்ள வித்துவான்கள் எல்லோரும்கூடி ஐயாவாளுக்கு அவ்வூரில் ஒரு கிருகத்தையும் நாலுகாணி நன்செய் நிலத்தையும் மகாராஜனிடம் சர்வமானியமாக வாங்கிக்கொடுக்க வேணுமென்று நிச்சயித்து, அவரை ராஜசபைக்குத் தந்திரமாய் அழைத்துப்போக உபாயம்தேடிச் சொல்லுகிறார்கள். ஓ பக்த சிரோமணியே! இப்போது நவராத்திரி உத்ஸவமாகையால், மகாராஜா சபையில் சாஸ்திரப் பிரசங்கங்கள் நடக்கின்றன. அவைகளைத் தாங்கள் பார்த்து ச்சந்தோஷப்பவேண்டும். என, ஐயாவாளும் அப்படியே சம்மதிக்க, வித்வான்கள் அவரை யழைத்துக்கொண்டு மகாராஜ சபைக்குப்போனார்கள். மகாராஜன் சிம்மாசனத்தில் கொலுவிருந்தான். வித்துவான்கள் ஐயாவாள் கையில் ஒரு தேங்காயைக்கொடுத்து இதை அதோ சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் பிரபுவினிடம் அனுக்கிரகம் செய்து கொடுங்கள் என்றார்கள். உடனே ஐயாவாள் எனது பிரபு ஆடுத்தவர் விட்டு வாசற்படியில் நிற்கும் கற்பகமல்லவோ, தயையினால் அர்ச்சுனன் விஷயமாய் வேடரூபம் தரித்தவர்,பெயரை உச்சரித்த மாத்திரத்தில் பாவத்தைப்பரிகரிப்பவர், மங்கையை இடதுபாகம் வைத்தவர், நீலகண்டத்தை யுடையவர், இந்த அரசன் எனது பிரபு வல்லவென்று சொல்லித்திரும்பினார். மஹாராஜன் பயந்து எழுந்து ஓடிவந்து இவரை வணங்கி நிற்க, இவரும் அரசனை ஆசீர்வாதித்துத் திருவிசநல்லூர் வந்து சேர்ந்தார். உடனே அரசன் இவரது மகிமையை வித்துவான்களிடம் தெரிந்துகொண்டு, நான் இவருக்குச் செய்ய வேண்டிய தென்னவென்று வித்துவான்களை வினவினான். அப்பொழுது அவர்கள் வேந்தனை நோக்கி அரசனே! இவாளுக்குத் திருவிசநல்லூரில் ஓர் கிருகமும் நாலுகாணி நன்

செய் நிலமும் சர்வமானிய மளிக்கவேணுமென்று சொல்ல, அரசன் அப்படியே கொடுத்து ஐயாவாள் பெயரால் பட்டயமும் செய்துவிட்டான். இந்தச்செய்தி ஐயாவாளுக்கு தெரிந்தால், அவர் ஊரைவிட்டுப் போய்விடுவாரென்று வித்வான்கள் பயந்து, தந்திரமாய் குடியிருக்கும் வீட்டைபேர் செய்யவேண்டுமென்றும், வேறு புதுவீட்டிலிருக்கலாமென்றும், சொல்லிப் புதுவீட்டிலிருத்தினார்கள். பிறகு ஊர்ப் பையன்களுக்குக் காவ்யபாடம் சொல்லவேணுமென்று அவாளை வித்துவான்கள் பிரார்த்திக்க, அவாளும்பிள்ளைகளுக்கு வித்தை கற்பித்துவர மானிய நிலத்தில் விளைந்த நெல்லைப் பிள்ளைகளுக்குச் சம்பளம் கொடுப்பவர்கள்போல அவாளுக்குக் கொடுத்து வந்தார்கள். அரசன் மானிய மளித்தது. ஐயாவாளுக்குத் தெரியவே தெரியாது.

சில தினங்களுக்குப் பின்பு, ஐயாவாள் தன் பிதாவின் சிரார்த்ததினத்தில் மத்தியான ஸ்நானம்செய்ய, காவேரிக்குப் போகும்போது, கிராமாதிகாரியால் தண்டனை யடைந்து தொழுமரத்திலடிக்கப்பட்டுப் பசியால் வருந்திக் கதறிக்கொண்டிருக்கும் பஞ்சமனொருவனைக் கண்டார். சகலப் பிராணிகளையும் பகவத் ஸ்வரூபமாகப் பாவிக்கும் அவர், மனமுருகி பஞ்சமனைப் பார்த்து ஏன்கதறுகிறாயென்றார். அதற்கவன் ஸ்வாமி! நான் தண்டிக்கப்பட்டு மூன்று நாளாய் பட்டினியாயிருக்கின்றேன். கண்கள் சோருகின்றன, ஆவி துடிக்கின்றது, அரைக்கணத்தில் எனது பிராணன் பிரிந்துபோகும் போலிருக்கிறது. எனது உயிரைக் காப்பாற்றவந்த மகாலிங்க மூர்த்திபோல் தாங்கள் காணப்படுகிறீர்கள் என்று புலம்ப, ஐயாவாள் உடனே திரும்பி, கிருகத்துக்குவந்து, சிரார்த்தத்துக்குச் சமையல் செய்து வைத்திருக்கும் அன்னம், பட்சியம், முதலானவைகளை ஓர் பாத்திரத்தில் நிறைய எடு

த்துகொண்டுபோய், அந்தப் பஞ்சமனிடம் வைத்துச் சாப்பிடுவாயென்ருர். அவனும் சாப்பிட்டு, திருப்தியடைந்தேன் என்ருன். இவரும் தனது பிதிர்க்கள் திருப்தி யடைந்தார்கள் என்ருர். பிறகு ஐயாவாள், வீட்டுக்கு வந்து, சுத்திபுண்யாக வாசனம்செய்து, புதுசாமான்களைக்கொண்டு, சிரார்த்தத்துக்குப்பாகம் செய்யச்சொல்லி, பிராமணர்களை யழைத்தார். பிராமணர்கள் வரமுடியாது, நீர் சிரார்த்த தினத்தில் சண்டாளனுக்கு அன்னமிட்டவராகையால், அதற்குப் பிராயசித்தமாகிய கங்காஸ்நானம்செய்து முடிக்கும் வரையிலும் நாங்கள் உமது கிருகத்துக்கு வரமாட்டோ மென்ருர்கள். ஊர் ஜனங்கள் முழுவதும் ஒரே கட்டுப்பாடாக விருந்தார்கள். உடனே ஐயாவாள் சிராத்தம் செய்ய ஆரம்பித்து, கூர்ச்சமென்ற மூன்று தர்ப்பை முடிச்சுகளைப்போட்டு, ஓர் முடியில் பிரம்மதேவனையும், ஓர் முடியில் பரமசிவனையும் ஓர் முடியில் மகாவிஷ்ணுவையும் ஆவாகனம் செய்து சிராத்தத்தை நடத்தினர். ஊர் வித்துவான்கள் சிராத்தம் எப்படி நடக்கிறது, பார்ப்போமென்று, அவர் மனையைச் சூழ்ந்து நின்றுகொண்டிருந்தார்கள். வாசற்கதவுதாள் போடப்பட்டிருந்தது. பக்கத்து வீடுகளில் சிலர் பதுங்கியிருந்து என்ன நடக்கிறதென்று பார்த்தார்கள். ஐயாவாள் கூர்ச்சங்களில் ஆவாகனம் செய்த மும்மூர்த்திகளும் வேதமந்திர கோஷம் செய்வதைக்கேட்டு திடுக்கிட்டார்கள். பிறகு சிராத்தம் முடிந்தவுடன் அம்மூவரும் அவ்வீட்டைவிட்டுப் புறப்பட்டு வெளியில் வருவதைகண்டு அவ்வூர்வாசிகளனைவரும் திகைத்து ஐயாவாளிடம் நெருங்கி வந்து ஸ்வாமி, நாங்கள் வரமாட்டோ மென்றுரைத்த தக்ஷணமே உத்தமர்களான மூன்று பிராமணர்கள் பிரம விஷ்ணு ருத்திரர்கள் போல உங்களுக்கு எங்கு கிடைத்தார்கள். ஒவ்வொருவரும் வேத

சாஸ்திர நிபுணர்கள். தெருவில் போகும்போதே எங்கள் மதிக்கெட்டாத விஷயமாய் சாஸ்திரப்பிரஸங்கம் செய்துகொண்டுபோகிறார்கள் என, ஐயாவாள் திடுக்கிட்டு மும்மூர்த்திகளைக் கூர்ச்சரங்களில் ஆவாகனம் செய்துசிரார்த்தம் நடத்தின சங்கதியை அவர்களுக்குச் சொல்லி, அவர்கள் தான் உங்களுக்குத் தரிசனம் கொடுத்தவர்கள். பாவியான எனக்கு அவர்கள் தரிசனம் கிடைக்கவில்லையென்று கண்ணீர்வடியக் கதறியழுதார். உடனே அவ்வூர் வாசிகள் அனைவரும் ஐயாவாளை வணங்கித் தாங்கள்செய்த அபராதத்தை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள்.

பிறகு வித்துவான்கள் விதித்தபடி, கங்காஸ்நான யாத்திரைக்குத் தன் மனைவியுடன் புறப்பட்டுக் கொஞ்சதூரம் போகும்போது, கங்காதேவி ஒரு பெண்வடிவமாகி, ஐயாவாள் முன்வந்து. ஓ பக்தசிரோமணியே! நான் கங்காதேவி, உமக்கு யாத்திரைசெய்யும் சிரமம்வேண்டாம். உமது மகிமையை ஊரெங்கும் பரவச்செய்வதற்காக நான் இந்தக்கார்த்திகைமாதம் அமாவாசை தினத்தில் உமது வீட்டுக் கிணற்றில் எனது அடையாளத்துடன் வருகிறேன். நிச்சயம்; நீர் திரும்பி வீட்டுக்குப் போகலாம் என்றாள். ஐயாவாளும் கங்காதேவியின் ஆக்கினைப்படி வீடுவந்து கங்காதேவி தன் வீட்டுக்கிணற்றில வரும் தினத்தை ஊரிலுள்ள சகல ஜனங்களுக்கும் தெரிவித்தார். அப்படியே அந்தக் கார்திகை மாதம் அமாவாசை தினத்தில் ஐயாவாள் வீட்டைச்சுற்றிலும் அனேக ஜனங்கள் சூழ்ந்து இந்தஆச்சரியத்தைப் பார்க்கின்றார்கள். அப்போது ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபர்களான 59-வது பட்டம் ஜகத்குரு ஸ்ரீபகவந்நாம போதேந்திர ஸரஸ்வதீசரணாள் இராமேசுவர யாத்திரை செய்துவிட்டுத் திரும்பிவரும்போது திருவிடைமருதூரில் வந்தி

றங்கினுர்கள். திருவிசநல்லூரில் ஐயாவாளுக்காக கங்கை வரப்போகிற சங்கதியைக்கேள்விப்பட்டு, அந்த தினமே அவ்வூருக்கு விஜயம்செய்து ஐயாவாள் கிருகத்துக்கேகினுர்கள். அப்போது ஐயாவாள் பிரபஞ்சத்தை மறந்து பகவானை தியானம் செய்துகொண்டிருந்தார். ஜகத்குருஸ்வாமிகளவர்கள் ஐயாவாளைக்கண்டு மகிழ்ந்தார்கள். ஐயாவாள் ஜகத்குரு ஸ்வாமிகளவர்கள் கண்களுக்கு பரமசிவ மூர்த்தியாகக்காணப்பட்டார். பிறகு ஐயாவாள் நிஷ்டை தெளிந்து ஜகத்குரு ஸ்வாமிகளவர்களைப் பார்த்து,

பகவந்நாம ஸாம்ராஜ்ய லக்ஷ்மீ ஸர்வஸ்யவிக்ரஹான்.
ஸ்ரீமத்போதேந்த்ர யோகீந்த்ர தேசிகேந்த்ராஅனுபாஸ்மஹே,

என்ற சுலோகத்தைச் சொல்லி வந்தனம் செய்தார். அப்போது ஸ்வாமிகளவர்களும்.

ஈசேதஸ்யச நாமனிப்ர விமலம் ஜ்ஞானம் தயோரூர்ஜிதம் ப்ரேமப்ரேமச தத்பரேஷ விரதிச்சான்யத்ர ஸர்வத்ரஸர்வத்ர ஈசேக்ஷாகருணச யஸ்யநியதா வ்ருத்தீ ச்ருதஸ்யாபியம் தம் வந்தே நரரூப மந்தக ரிபும் ஸ்ரீவேங்கடேசம் குரும். என்ற சுலோகத்தினுல் ஐயாவாளைப் புகழ்ந்தார். இப்படி ஆனந்த பரவசர்களாய் இருவரும் கொஞ்சநேரம் சம்பாஷணம்செய்து, பிறகு ஐயாவாள் கங்காஷ்டகம் என்ற எட்டு சுலோகங்களால் கங்காதேவியின் வரவை பிரார்த்திக்க அவளும் அவரது வீட்டுக்கிணற்றில், மஞ்சள் குங்குமம் சந்தனம் புஷ்பம் தாம்பூலம் கருகமணி பிச்சோலை முதலிய பதார்த்தங்களுடன் வாசனைபெருகப்பொங்கித் தெருக்களிலோட ஆரம்பித்தாள். ஜகத்குரு போதேந்திர ஸ்வாமிகளவர்களும் மற்றுமுள்ள ஜனங்களும் அவ்வூர் வாசிகளும் அந்த கங்கையில் ஸ்நானம்செய்தார்கள். எல்லோரும் ஐயாவாளை மிகக் கொண்டாடினுர்கள். அவ்வேளை, பைராகியாகிய கௌட

பிராமணன் ஒருவன், ஓடிவந்து அந்த கங்கையில் ஸ்நானம் செய்து, காவடியில் அந்தக் கங்கையை எடுத்துகொண்டு இராமேசுவரத்துக்குப் புறப்பட்டான். ஸ்வாமிகளவர்களும் ஐயாவாளும், அவனைப்பார்த்து ஓ பிராமணா! நீ ஏன் இக்கூபத்தில் கங்கை யெடுத்துகொண்டு போகிறாய், நீ நேரே கங்கையிலிருந்து கொண்டுவந்த தீர்த்தமெங்கேயென்று வினவினார்கள். அதற்கவன் ஸ்வாமிகளவர்களையும் ஐயாவாளையும் நமஸ்கரித்து, ஸ்வாமிகளே! நான் இருப்பது உத்தரதேசம். கௌடபிராமணன். காசியிலிருந்து புறப்பட்டு இராமேசுவரம் போகின்றேன். நேற்று மத்தியார்ஜுன க்ஷேத்திரத்தில் தங்கியிருந்தேன். இராத்திரி சொப்னத்தில் கங்காதேவி எனக்குத் தரிசனம்கொடுத்து, தான் இக்கூபத்துக்குச் செல்லுவதாயும், இக்கூபத்திலிருந்து கங்கையெடுத்துக்கொண்டு போவென்றும் எனக்குச்சொன்னாள். காலையில் காவடியைத்திறந்து பார்த்தேன். கங்கையைக் காணமல் திகைத்து அவள் சொற்படி இங்கு வந்து ஸ்நானம்செய்து கங்கையெடுத்துக்கொண்டு போகிறேன் என்றான். இதைக் கேட்ட ஸகலரும் ஆச்சரியமடைந்தார்கள். அவனும் இராமேசுவரம் சென்றான். பிறகு ஸ்வாமிகளவர்களும், ஐயாவாளும், மத்தியார்ஜுன க்ஷேத்திரத்தில் வசித்துகொண்டு பகவந்நாம கீர்த்தனம்செய்து வந்தார்கள். ஸ்வாமிகளவர்கள் இயற்றிய நாமாமிர்தரஸோதயம் முதலிய லக்ஷம் கிரந்தங்களடங்கிய எட்டு புஸ்தகங்களையும் ஐயாவாள் பார்த்து, ஆனந்த சாகரத்திலமர்ந்தார். ஸ்வாமிகளவர்களும் ஐயாவாள் இயற்றிய ஆக்யாஷஷ்டி, தயாசதகம், மாதுர்பூதேசசதகம், ஸ்துதிபத்ததி, சிவபக்த கல்பலதிகை, சிவபக்தலக்ஷணம், ஆர்த்தி ஹரஸ்துதி, ஜம்புநாதாஷ்டகம், தோஷபரிகாராஷ்டகம், என்ற கிரந்தங்களைப் பார்த்து மகிழ்ந்தார்கள்.

பிறகு அவ்வூரில் ஒரு குழந்தையைப் பாம்பு கடித்து அது இறந்துவிட, அக்குழந்தையின் மாதாபிதாக்கள் சோகக்கடலில் ஆழ்ந்து கதறிக்கொண்டிருக்கும்போது, ஐயாவாள் கண்டு தாராவலி ஸ்தோத்திரமென்ற, சுலோகங்களினல் பரமசிவனைப் பிரார்த்திக்க, அக்குழந்தை உயிர்த்தெழுந்து விளையாடியது. ஒருக்கால் திருவிசநல்லூரில் மழையில்லாமல் தவிக்கும் ஜனங்கள், மழைபெய்யும்படி செய்யவேணுமென்று ஐயாவாளைப் பிரார்த்திக்க, அவாளும் குளீராஷ்டகமென்ற சுலோகங்களினல் கர்க்கடேசுவரரைப் பிரார்த்திக்க உடனே மழைபெய்தது. ஒரு தினம் சுவாமி தரிசனத்துக்காக சா.பந்திரம் மத்தியார்ஜுனம் போகவொட்டாமல், காவிரியில் பிரவாகமதிகரிக்க, ஐயாவாள் பரமசிவனைத் தியானம் செய்து கொண்டிருந்தார். மகாலிங்க மூர்த்தி சிவார்ச்சகரை போல இரவில் இவர் துவிடுவந்து விபூதிப்பிரஸாதம் கொடுத்தார். ஐயாவாள் அர்ச்சகரைப் பார்த்து எப்படிவந்தீர் என்றார். அதற்கவர் காவிரியில் நீந்திவந்தேனென்றார். ஐயாவாள் சிவார்ச்சகருக்கு அர்ச்சனைக்காக ஒரு பணம் தக்ஷிணை கொடுத்தார். அதை பகவான் வாங்கிக்கொண்டு மறைந்தார். மறுநாள் உண்மையான சிவார்ச்சகர் காலையில் கோவிலைத்திறந்து பார்க்கையில், மகாலிங்கத்தின் சிரசில் ஒரு பணம் தக்ஷிணை வைத்திருப்பதைக்கண்டு இதுவதென்றுசங்கித்தார். அன்று காவிரிநதி வடிந்துவிட, ஐயாவாள் மகாலிங்க மூர்த்தியைத் தரிசனம்செய்யக் கோவிலுக்கு வந்தவுடன் சிவார்ச்சகர் அவாளைப்பார்த்து, காவேரிப்பிரவாகத்தால் நேற்று தங்களுக்கு விபூதிப்பிரசாதம் கிடைக்காமற் போயிற்றென்று சொல்ல, ஐயாவாளும் சிவார்க்கரைப் பார்த்து தாங்கள் என் விட்டுக்குவந்து விபூதிப்பிரஸாதம் கொடுத்து தக்ஷிணைவாங்கிப போகவில்லையாவென, சிவார்ச்கர், ஸ்வாமி! நான் வர

வில்லையே, பரமசிவனே எனது உருக்கொண்டு வந்திருக்கலாம். தாங்கள் கொடுத்த தக்ஷிணைப்பணம் மகாலிங்கத்தின் சிரசிலிருந்தது. நானும் ஆச்சரியப்பட்டு எடுத்துக்கொண்டேன் என்றார். ஐயாவாள், தன்முன் சிவார்ச்சகர்போல் வந்து விபூதிப்பிரசாதம் அளித்துப்போன பரமசிவனை நினைந்துருகி ஸ்தோத்திரம் செய்தார்.

பிறகு அந்தத் திருவிசநல்லூரில் வசித்துகொண்டிருந்த கோவிந்த ஸம்யமீயென்ற ஸந்நியாசி நாமகீர்த்தனம் செய்வது ஸ்திரீகளுக்கும் சூத்திரர்களுக்கும் தகுமேயல்லாமல், பிராமணர்களுக்கு உரியதல்லவென்று ஐயாவாளை நிந்தித்துக்கொண்டிருந்தார். ஒருநாள் அந்தச் சந்நியாசி காவிரிக்கரை மடத்தில் இராத்திரி படுத்துறங்கும்போது, பரமசிவன் ஒருயக்ஷரூபமாகவந்து, ஸந்நியாசியின் மார்பிலுட்கார்ந்து, அடாபாவி! எனது பக்தனைத் தூஷிக்கின்றாய். இக்கலியுகத்தில் சகலப் பிராணிகளும் நாம கீர்த்னத்தாலேயே கடைதேற வேண்டும். உனக்கும் நாமகீர்த்தனந்தான் கதியென்று வேத சாஸ்திரங்களிலுள்ள ஆதாரங்களைச் சொல்லி, அவரை ஜயித்து மறைந்துபோனார். உடனே ஸந்நியாசி திடுக்கிட்டுப் பிழைத்தேனென்று எழுந்திருந்து, ஸ்நானம்செய்யக் காவிரிக்குவரும் ஐயாவாளைக்கண்டு சங்கதிதெரிவிக்க, ஐயாவாளும், (ஈசேந யம்பரதி) என்ற சுலோகத்தைச் சொல்லி ஸந்நியாசியை வணங்க, அன்று முதல் ஸன்னியாசி நாமகீர்த்தனம் செய்யத்தொடங்கினார். இவரைத்தான் ஜகத்குரு போதேந்திர ஸ்வாமிகளவர்கள் 60-வது பட்டத்தில் ஏற்படுத்தினார்கள்.

ஒரு நாள் சதாசிவ பிர்மேந்திரஸ்வாமி, ஐயாவாளைப் பார்க்கத் திருவிசநல்லூருக்கு வந்தார். ஐயாவாள், பிர்மம் அவர்களை, நமஸ்கரித்து ஸ்தோத்திரம்செய்ய; சதாசிவப்

பிரமத்தின் தேகத்தில், ஹர்ஷத்தாலுண்டான மயிர்க்கூறு களைக்கண்டு (த்ருணகணிதாகிலஜகதாம்) என்ற சுலோகத்தைச்சொல்ல மௌனவிரதம்கொண்ட பிர்மேந்திராள், வாய் திறந்து ஸ்ரீதரவேங்கடேசார்ய! எனக்கு ஹர்ஷவிஷாதங்கள் நீங்கவில்லை, என்ன செய்யலாமென்றார். அதற்கு ஐயாவாள் இனிமௌனம் வேண்டாம். பகவந்நாம கீர்த்தனம் செய்வது நலமென்றார். பிர்மேந்திராளும் அப்படியே நாமகீர்த்தனம் செய்து பகவத்குண கீர்த்தனங்களியற்றிப் பிர்மானந்தமடைந்தார்.

எப்போதும் சிவ பஜனம்செய்யும் ஐயாவாளைச்சில ஜனங்கள் விஷ்ணு துவேஷியென்று கருதி இவரைப் பரீக்ஷிக்கிறதற்காக உறியடித்திருநாள் தினம் பகவானை. கிருஷ்ணன் போலலங்கரித்து வீதியில் எழுந்தருளச்செய்தார்கள். அப்போது ஐயாவாள் பகவானை நமஸ்காரம் செய்து கிருஷ்ண துவாதசமஞ்சரீ, அச்சுதாஷ்டகம், டோளாநவரத்னமாலிகை, யென்ற கிரந்தங்களை இயற்றித் துதித்தார். ஸ்ரீ போதேந்திர ஸ்வாமிகளவர்கள் வேண்டுகோளின்படி இராமநாம விஷயமாய் இரண்டு சுலோகங்கள் இயற்றினர்.

அக்காலத்தில் மிலேச்ச அரசன் கலகக்காரர்களென்னும் தனது ஸைனியங்களுடன் இச்சோழநாட்டைக் கொள்ளையாடி அனேகரை வதைசெய்து கோவில்களைப்பாழாக்கி வரும்பொழுது, திருவிசநல்லூர் மார்க்கமாய் வருவதையறிந்த அவ்வூர் ஜனங்கள் பயந்து ஐயாவாளிடம் முறையிட்டார்கள். அப்பொழுது ஐயாவாள் அவர்களைப்பார்த்து, பயப்பட வேண்டாம், என்னுடன்கூடவிருந்து நாமகீர்த்தனம் செய்யுங்கள், பகவான் காப்பாற்றுவார் என்று தேற்றி, காவேரி மணலில் அச்சனங்கள் சூழ நடுமத்தியிலிருந்து நாமகீர்த்தனம் செய்தார். ஜனங்களும் நாமகீர்த்தனகோஷம் செய்தார்

கள். கலகக்காரத் துலுக்கர்கள், குதிரைகளின்மேல் வரிசை வரிசையாய் வரும்போது, காவேரிமணலில் ஐயாவாள் தன்னைச்சூழ்ந்த ஜனங்களுடன் நாமகோஷம் செய்வதைக்கண்டார்கள். ஐயாவாள் அந்த மிலேச்சர்கள் கண்களுக்குத் தெய்வமாகத்தோற்ற உடனே அவர்கள் ஒரு சால்வையை விரித்து அதில் தங்கமோகரா நாணயங்களைக் குவியலாகக் கொட்டிச் சலாம் செய்துவிட்டுப் போனார்கள். ஐயாவாள் நிஷ்டையிலிருந்து எழுந்திருந்து சால்வையில் நிறைந்திருக்கும் தங்க நாணயங்களை எடுத்து, மகாலிங்கமூர்த்திக்கு நாகாபரணம் செய்து சாத்தினார். ஸ்ரீ போதேந்திரஸ்வாமிகளவர்கள் கோவிந்தபுரத்தில் சித்தியடையவே ஐயாவாள் மனமுருகி, நாமபஜனம்செய்துவந்தார். பிறகு ஒரு நாள் மத்தியார் ஜுனக்ஷேத்திரம்சென்று சாயங்காலம் சிவதரிசனத்துக்காகக் கோவிலுக்குட் செல்லும்போது, நந்திமேடையில் (வதூபுத்ரகாதீன்) என்ற சுலோகத்தை யெழுதி, கர்ப்ப கிருஹம் சென்று பகவானைத்தரிசித்து ப்பரவசிவனுடன் கலந்தார். திரும்பி வெளியில் வருவாரென்று காத்திருந்த ஜனங்கள் அவரைக்காணவில்லை. சகல ஜனங்களும் ஐயாவாள் மகிமையைக்கொண்டாடி நாமகீர்த்தனம் செய்தார்கள். இந்தக்கதையைப் படிப்போருக்கும் கேட்போருக்கும் பரமசிவன் சர்வாபீஷ்டத்தைக் கொடுத்து இரட்சிப்பாராக.

உ

ஸ்ரீராமஜயம்,

ஸத்குரு தியாகராஜஸ்வாமி சரித்திரம்.

உலகுபுகழ் சோழநாட்டில் காவிரி நதி வடகரையில்

"கலையார்மதியோடுறைநீருந் நிலையார் சடையாரிடமாகு
மலையாரமுமா மணிசந்தோ டலையார் புனல்சேருமையாறே,
என்றும், புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட்
டை மேலுந்தி, யலமந்தபோதாக வஞ்சேலென்றருள் செய்வா
னமருங்கோயில், வலம்வந்தமடவார்கள் நடமாட முழவதிர
மழையென்றஞ்சிச், சிலமந்தியலமந்து மரமேறி முகில்பார்க்
கும் திருவையாறே.

என்றும் திருஞானசம்பந்தஸ்வாமியாலும், ஓசையொலியெலாமானாய் நீயே என்று திருநாவுக்கரசுஸ்வாமியாலும், பரவும்பரிசொன்றறியேன் என்று சுந்தரமூர்த்திஸ்வாமியாலும், அனேகபாடல்கள் பெற்றுவிளங்கும் ஜீவன்முக்திஸ்தலமாகிய திருவையாறு என்று பெயர் பூண்ட ஓர் சிவஸ்தலமுண்டு. அதில் நித்தியவிதிவழுவாமல் இராமப்ஜனம் செய்துகொண்டு சாந்தகுணமுடையவராய் ராமபிர்ம்ம என்ற ஒரு பூசுரசிரேஷ்டர் இருந்தார். அவர் ஸகல நற்குணங்கள் பொருந்திய சாந்தையென்ற மனைவியோடு புத்திரன்வேண்டுமென்று ஸ்ரீராமபிரானைக்குறித்து தவம் செய்துவரும்நாளில் கிரமமாய் இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்களில் மூத்தவனுக்கு ஜப்யேசனென்றும் இளையோனுக்கு தியாகராஜஸ்வாமி யென்றும் அழகாக நாமகரணம் செய்தார். ஆகாரம் முதலானவைகளுக்குப் பூர்த்தியான ஐவேஜியில்லாததினால் உஞ்சவிர்த்தியில் தனக்குக் கிடைக்கும் பதார்த்தங்களைக்கொண்டு புத்திரர்க

ளேயும் மனைவியையும் ஆதரித்துத்தானும் திருப்தியடைந்த வராய் ஸர்வேசுவரனாகிய ஸ்ரீ ராமசந்திரனை பஜித்துக்கொண் டிருந்தார். அக்காலத்தில் தஞ்சைநகர் அரசன் திருவையாற் றில் பதினைந்துவீடுகள் கட்டி தானம்செய்ய எத்தனித்து இந்த ராமபிர்ம்மம் என்ற பூசுரருக்கு ஒரு வீட்டைத்தானம் செய்யவிரும்பி அவரை வருந்தியழைக்க அவர் பிரதிக்கிரகம் வாங்க இஷ்டமில்லாதவராய் வேண்டாமென்று தடுத்தார். அரசன் பிடிவாதமாய் வாங்கிக்கொள்ளவேணுமென்று நிர்ப் பந்தம் செய்தான். பிறகு அரசன் ஆக்கினையை மீறி நடக்க முடியாதவராய் சரி என்றிசைந்தார். அரசன் மனமகிழ்ந்து முதல் வீட்டை இவருக்குத் தானமாய்க்கொடுத்து மற்ற வீடுகளையும் பிராமணர்களுக்கு தானம்செய்து முடியுமுன் அந்தவைராக்கியமுள்ள பக்தசிரோமணி தானடைந்த வீட் டை வேறொரு ஏழைப் பிராமணனுக்குத் தத்தம் செய்து விட்டார். அதுகேட்டு அரசன் இப்படியும் உலகத்தில் பற் றற்ற மகாத்மா உண்டோவென்று ஆச்சரிய மடைந்தான். ராமபிர்மம் தன் குமாரர் இருவருக்கும் சொந்தபாஷையாகிய ஆந்திரம், ஸம்ஸ்கிருதம் இவைகளை நன்றாய்க்கற்பித்து உப நயநமும் வேதவிதிப்படி நடத்தி வேதசாஸ்திரங்களையும் கற்பித்தார். மூத்தவனாகிய ஜப்யேசன் மந்தமதியாகையால் வேதசாஸ்திரங்களில் தேர்ச்சியடையாமல் எப்பொழுதும் விஷமஸ்வபாவமுள்ளவனாயிருந்தான். இரண்டாவது குமார னாகிய தியாகராஜஸ்வாமியோ தனது பிதாவைப்போல் இள மைப்பருவத்திலேயே ஞானவைராக்கிய முள்ளவராய் ஸ்ரீரா மகைங்கர்யம் செய்யவிரும்பி தனதுபிதா செய்துவரும் ஸ்ரீ ராமபூஜைக்கு புஷ்பம், துளஸி எடுத்துவைப்பதிலும் சந்த னமிழைத்து வைப்பதிலும், மாலை தொடுத்துவைப்பதிலும் ஆசையுடையவராயிருந்தார். மேலும் அந்த ஊரில் வசித்துக்

கொண்டிருந்த ஸங்கீதமகாவித்வானுகிய வீணைவெங்கிடரம ண தாஸரிடம்போய்சங்கீதமும்அப்பியாஸம் பண்ணிக்கொண் டுவந்தார். கொஞ்சநாளில் தியாகராஜஸ்வாமிசங்கீதஸாகித் யங்களில் தேர்ச்சியடைந்து ஸம்ஸ்கிருத ஆந்திரபாஷைகளில் இராமகுணங்களை இருபத்துநாலாயிரம் கீர்த்தனங்களாலே பாடவேணுமென்றுநிச்சயித்து,ஆரம்பித்தில்விநாயக்கடவுளை "கிரிராஜஸுதாதநய வென்னும் கீர்த்தனத்தால் துதிசெய் தார். உடனே கஜமுகன் எதிரில்வந்து உமதுமனோரதம் நிறைவேறுவதாகவென்று அனுக்கிரகம் செய்து மறைந்தார். ஸ்ரீ கணபதிநீஸேவின் சரே யென்ற கீர்த்தனத்தால் விக்னே சனை ஸ்துதிசெய்து பிறகு ஸ்ரீராமவிஷயமாய் நின்னேபஜன ஜகதானந்தகாரக வென்று தொடங்கி துடுகுதல, எந்தரோ மகானுபாவுலு, ஸாதிஞ்சனே கனகனருசிரா வென்று பஞ்ச ரத்னமென்று பெயருடைய ஐந்து கீர்த்தனங்களைப் பாடினுர். கிரமமாய் இருகுமாரருக்கும் விவாகம் நடத்தி ராமபிர்மம் பரகதியடைந்தார். பிறகு பிரபஞ்சதர்மத்தில் ஆழ்ந்த ஜப் யேசனுக்கும் பாரமார்த்திக தர்மத்தில் சிந்தையுள்ள தியாக ராஜஸ்வாமிக்கும், ஒற்றுமையில்லாமல், இருவரும் விபாகம் செய்துகொண்டார்கள். தியாகராஜஸ்வாமி தனது பாகத்தில் பாதிவீட்டையும் ஒருகாணி நஞ்சை நிலத்தையும் அர்ச்சா வதாரமாய் தனதுகிரகத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ராம பிரான் ஸீதை, லக்ஷமணன், அனுமான், இவர்களையும் அடைந்தார். பிறகு பகவானை அலங்கரித்து கோலுவையுன் னுடேவென்ற கீர்த்தனத்தையும் தனக்குக்கிடைத்த பாக்கி யத்தை நினைத்து கோலுவமரகதாவென்ற கீர்த்தனத்தையும் பாடிமகிழ்ந்தார். பிறகு தனக்கு குருகிருபை வேண்டுமென்று நாரதபகவானை தியானம் செய்து குருலேகயேவேண்டி புத் திராது என்ற கீர்த்தனங்களைப் பாடினுர். இப்படியிருக்

கையில் வால்மீகியம்சமாய்விளங்கும் தியாகராஜஸ்வாமிக்கு அனுக்கிரகம் செய்வதற்கு நாரதமகாமுனி ஒரு சன்னியாசி வடிவங்கொண்டு அவர் மனைக்கேகினர். தியாகராஜஸ்வாமியும் ஸன்னியாசியை ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து வணங்கிநிற்க. ஸன்னியாசி தியாகராஜஸ்வாமியைப்பார்த்து ஓ பக்தசிரோன்மணி வம்சத்தில் உதித்த குமாரனே! ஸ்ரீராம குணங்கள் நிறைந்த உனது ஸங்கீத ஸாகித்யங்களைக் கேட்க ஆசைகொண்டு இவ்விடம் வந்தேன், சற்றுப்பாடுவாயாக, என்ற உடனே நம்மிடம் சங்கீதம் கேட்க ஆசை கொண்ட ஸன்னியாசி நாரதமுனியாக இருக்கவேண்டுமென்று தீர்மானித்து ராமா நின்னே, ஸ்ரீ நாரதகுருஸாமி. வரநாரத, நீ சித்தமு என்ற கீர்த்தனங்கள் பாடவே ஸன்னியாஸி கேட்டு இவர் நமது ஸ்வரூபத்தையறிந்து விட்டாரென்று நினைத்து தியாகராஜஸ்வாமிக்கு இராமதாரகமந்திரத்தை யுபதேசிக்க மனங்களித்து எந்த பாக்கியமும், இதே பாக்கிய தியானமே, மும்மூர்த்தலு, ஸந்தேகமு என்ற கீர்த்தனங்கள் பாடவே, நாரதஸ்வாமிகேட்டு தனதிடமிருந்த ஸ்வரரா கஸுதாரஸம் என்ற ஒரு புஸ்தகத்தை இவரிடம் கொடுத்துப் போய்வருகிறேனென்ற உடனே தியாகராஜஸ்வாமி ஸன்னியாசியை வணங்கி ஸ்வாமி, இந்த கிரகத்தில் பிக்ஷை கிருஹிக்கவேணும் என்று பிரார்த்தித்துத் தனது பத்தினியிடம் தெரிவிக்க உட்சென்று அவளிடம் தெரிவித்து வெளியில்வந்து பார்க்கையில் ஸன்னியாஸியைக்காணுமல் ஊர் முழுவதும் தேடிப்பார்த்தார். ஸன்னியாசி அகப்படவில்லை. அவர்தந்த புஸ்தகத்தை அவிழ்த்துப்பார்க்க அதில்அனேக ஸங்கீத ஸாகித்ய ரகஸ்யங்கள் அடங்கியிருந்தன. முதற்பக்கத்திலேயே அதற்கு நாரதீயமென்று பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தப் புஸ்தகத்திலேயே தியாகராஜஸ்வாமிக்கு

ஸங்கீதஸாகித்யங்கள் மிகவும் விர்த்தியடைந்தன. பிறகு ஸீதாவர, ஸ்வரராகஸுதாரஸ, கீதார்த்தமு, ஸங்கீதஜ்ஞானமு, ஸங்கீதசாஸ்தர, நாதோபாஸன, மோக்ஷமுதலதா, ஆனந்தஸாகர வென்ற கீர்த்தனங்களால் ஸங்கீதத்தின் பெருமையைக் கொண்டாடினர். பிறகு ஸ்ரீராமமூர்த்தியை நேரில் பார்க்கவேணுமென்று என்னடோஜு ஏதுனோ. நேநேந்துவேதகுதுரா, வினயமுன்னு, என்ற கீர்த்தனங்களும், மனதை சிக்ஷித்து விநவே ஓமனஸா, உண்டேதி, மனஸா ஸ்ரீராம சந்த்ருனி, மரவகுரா, பரலோகஸா, பஜசிரபஜமானஸ, தேலிஸிராம, கடதேரராதா, பஜனஸேயராதா, பஜனஸேயவே, சக்கனிராஜ, இப்படி அநேகம் கீர்த்தனங்களும்பாடினர். திருநாவுக்கரசுஸ்வாமிக்குப் பரமசிவன் காட்சிதந்த அவ்வூர் தக்ஷிணகயிலாஸக்கோவிலுக்கு பிரதிதினமும் சென்று தனது தர்மபத்தினியுடன் தினம்ஒன்றுக்கு லட்சத்து எண்ணாயிரம் ராமநாமம் செய்து ராமார்ப்பணம் பண்ணிவந்தார். இராமபஜனத்தில் உள்ள ஸுகத்தை சிலாகித்து அப்ராம பக்தி, பதவினீ, நாமகு ஸுபமுல, யெடலேன, பக்திபித்ஸ, ராமபக்தி, ஸ்மரணேசுகமு, என்ற கீர்த்தனங்களால் ராம பக்தியைக்கொண்டாடி தேலியலேரு, நடசிநடசி, ஏமிஸேஜு, ராமாநீயெட, நிஜமுகநீ, நீபஜனகான, கலிநருலகு என்ற கீர்க்தனங்களால் பக்திரஸம் தெரியாதவர்களை இகழ்ந்து பரிதாபப்பட்டார். இப்படி தொண்ணூற்று ஆறுகோடி நாமம்செய்து முடிந்த தினத்தில் ஸ்ரீராமன் தனது பரிவாரங்களுடன் தரிசனம் கொடுக்க மனதுமகிழ்ந்து, கிரிபை நேல கோனராமுனி, தோருதுணு, கனகனருசிரா, கனுகோணு, ஸோகஸுஜூடு, எந்தமுத்து, நினுவினுசுகமு, சியாமசுந்திர, லாவண்யராமா மரகதமஹ, என்ற கீர்த்தனங்கள் பாடி மகிழ்ந்தார்.

180024

பிரதிதினமும் ராத்திரி தான் படுக்கைக்குப்போகுமுன் பால் பழம் தாம்பூலம் முதலியவைகளை இராமன் ஸன்னிதியில்வைத்து உபசாரமுலனு, ஆரகிம்பவே, விடமுஸேயவே, என்றகீர்த்தனங்கள் பாடி தெரைபோட்டுப்படுப்பார். காலையிலெழுந்து பார்த்தால் பாதிப்பால் பாதிப்பழம் இருக்கும். தாம்பூலம்மென்று உமிழப்பட்டிருக்கும். இப்படி இராமனுல் தினமும் கொடுக்கப்படும் பிரஸாதத்தைத்தான் புசித்து நினுபாசி, ராமநீஸமான, மேருஸமான, நாஜீவாதரா, கருணஸமுத்ர, பவநுத, மோகநராம, காருவேல்புலு எந்து கௌக, சேதுலார, எட்ட தோரிகிதி, துளஸீதள, துளஸீபில்வ என்ற கீர்த்தனங்கள் பாடினர். பிரதி ஏகாதசிகளிலும் தான் உபவாஸமிருந்து ராத்திரி ஸ்ரீராமனுக்கு உத்ஸவம் நடத்துவதில் ஸ்ரீபதே, ரமின்சுவாரு, நேருஞ்சி, நினுவினு நாமதிந்து, நநுமோமு, எந்துதாகி. தாசரதேதயா, ஏராமுனி, தலிதண்ட்ருலு, மனவிநி மரசேவாடனு, ராமா நீபை, விநயாஸ, லோகாவன, முதலிய கீர்த்தனங்கள் சுகம் சொல்லி முடியாது. பிருந்தாவன துவாதசியில் துளசிபூஜை செய்து தேவி ஸ்ரீதுளசம்ம, அம்மராவம்ம, வென்று துளஸிவிஷயமாய் அனேக கீர்த்தனங்கள் பாடினர்.

தியாகராஜஸ்வாமி தன்னிடத்தில் சங்கீதங் கீர்த்தனங்கள் அப்பியாசம் பண்ணின உத்தமசிஷ்யர்களுடன் ஸப்தஸ்தலப்பிரதக்ஷிணி உத்ஸவத்தில் பாடிக்கொண்டுவரும் வைபவத்தை ஆதிசேஷனும் வர்ணிக்க சமர்த்தனுகான். நாததனும், ஏஹிபஞ்னதீசா, தேவாதிதேவ, என்ற கீர்த்தனங்களின் சுகம் சொல்லி முடியுமோ. வருஷந்தோறும் தனதுகிரகத்தில் நடக்கும் ஸ்ரீ ராமநவமி உத்ஸவத்தில் பிராமணசந்தர்ப்பணம் விசேஷமாய்ச் செய்துவருவார். புதிதுபுதிதாய் அநேக கீர்த்தனங்கள் கேட்க ஆவலோடு வரும் ஜனங்

களை அளவிடமுடியாது. உத்ஸவத்துக்கும் பஜனத்துக்கும் அனேக இடையூறுகளைச் செய்து வந்த இவரது தமயனாகிய ஜப்யேசன் தியாகராஜசுவாமிக்குப் பிராணரூபமாய் விளங்கும் ஸ்ரீராமமூர்த்தியையும் ஸீதை லக்ஷ்மணன் அனுமான் இவர்களையும் அவனுக்கிஷ்டர்களாகிய துஷ்டர்களைச் சேர்த்துக்கொண்டு திருடிக் காவிரியில் போட்டுவிட்டான். அப்போது உண்மையை தெரிந்து தியாகராஜஸ்வாமி அனியாயமுலேயகுர, நாயடவஞ்சன, மரியாதகாதுரா, மரியாதகாதய்யா, ராநீதி, இந்துகா, என்ற கீர்த்தனங்களையும், ராமன் பிரிவைச் சகிக்கமாட்டாதவராய், சேரராவதேமிரா, சலமேலரா, மரிமரி, கோனியாடே, மாருபல்க, எமிதோவ, அபிமானமு, ராமநன்னு, பட்டிவிடுவே, குலபிருத, எமிநேரமு, நன்னுப்ரோவ, எந்துகுநிர்தய, பாஹிராமசந்த்ர, வேரேவ்வரே, ராமசந்திரிநீ, ராமதெய்வமா, ஸார்வபௌம, சேந்தனே, எந்தவேடு, தநவாரிதனமு, மாடாடவேமி, ஸீதாபதே, ஸாக்ஷிலேதனுசு, நாமோராலகிம்ப, காலஹரண, மதிலோன, ஆதயஸ்ரீ, தரிதாபு, ப்ரோசே, ராமபிராம, தண்டமு, பலுகவேமி, நேமோர, நாட்டிமட, வத்தனேவாரு, லேமிதெல்ப, பாகாயதனமீதனே, ஸ்ரீகாந்த, நீசித்தமு, முதலிய கீர்த்தனங்களைப் பாடி, ஆகார நித்திரையில்லாமல், புலம்பிக்கொண்டிருக்கையில் ஒருநாள் பகவான் இவருக்கு சொப்பனத்தில் தானிருக்குமிடத்தைத் தெரிவிக்க, காவிரியாற்றில் மணலைத் தோண்டித் தேடிக்கொண்டுவந்தார். ஒரு வருடம் கழிந்தபின், மூர்த்திகள் நால்வரும் அகப்பட்டார்கள். உடனே திருமஞ்சனஞ்செய்து, முத்துமோமு, அலகலல்லாட, ஸ்ரீராமஜயராம, கலிகியுண்டே, எபனிகோ, என்ற கீர்த்தனங்கள் பாடி ஆறுதலையடைந்தார். பிறகு ஜப்யேசனுக்கு நல்ல புத்தியை யளிக்கவேண்டுமென்று பகவானை பிரார்த்தித்தமாத்

திரத்தில் தமயனை ஜப்யேசனுக்கும் நல்ல புத்தி வந்து அவனும் இராமபஜனம் செய்யத்தொடங்கினன். ஒருநாள் இவரது பத்தினிவீட்டுக்குள் ஈசுவரி தர்மாம்பிகையுடன் பேசிக்கொண்டிருக்கையில் திடீரென்று இவர் உட்செல்ல தேவி மறைந்துவிட்டாள். இவர் தனது பத்தினியைப்பார்த்து யாருடன் பேசிக்கொண்டிருந்தாயென்று வினவ அம்மாள் ஒன்றும் பேசாமல் நிற்க, தரினிதெலுஸ்கோண்டி; மந்தகமனி, சிவேபாஹிமாமம்பிகே, அம்பநின்னு, கன்னதல்லி, நன்னு கன்னதல்லி யென்ற கீர்த்தனங்கள்பாடி தான் தெரிந்துகொண்டதை வெளியிட்டார். சிலநாட் சென்றபின் இவர் பத்தினி பரகதியடைந்துவிடவே அக்காலத்தில் அந்த உத்தமியின் குணங்களை நினைத்து அவள் பிரிவைச் சகிக்கமுடியாதவராய் தோலிஜன்மமுன, தோலினே, எபாபமு என்ற கீர்த்தனங்கள்பாடித் துயரப்பட்டார். ஒருக்கால் தஞ்சையரசன் தனது அரண்மனைக்கு வரவேணுமென்று தியாகராஜஸ்வாமியை யழைக்க அவ்விடம் செல்ல மனமில்லாதவராய் நிதிசாலசுக்மாவேன்று கீர்த்தனம்பாடி நரஸ்துதியிலும் பரிசுவாங்குவதிலும் இஷ்டமில்லாமல் அலக்ஷியமாயிருந்துவிட்டார். அரசன் கோபங்கொண்டு திரும்பவும் அவரையழைத்துவரும்படி சேவகர்களையனுப்பினன். சேவகர்களும் அவரிடம்போய் அரசன் ஆக்கினையைத் தெரிவித்தார்கள். அதற்கு தியாகராஜஸ்வாமி ஓ சேவகர்களே! சாதாரண ராஜாவிடத்தில் தியாகராஜா வரமாட்டாரென்று சொல்லுங்கள் என்ருர். அப்படியே சேவகர்களும் அரசனிடம் தெரிவிக்க அவன் கடுங்கோபங்கொண்டு தியாகராஜஸ்வாமியை எப்படியாவது வலிபந்தம்செய்து தனது அரண்மனைக்கு அழைத்துவருவ தென்று நினைத்தான். உடனே அவனுக்குச் சகிக்கமுடியாத வயிற்று வலியுண்

டாக அவன் தியாகராஜஸ்வாமி யிடமேகி தான் நினைத்த அபராதத்தினல் தனக்கு நேர்ந்த விபத்தை வெளியிட்டுக் காலில்விழுந்தான். ஸ்வாமியும் ராஜாவின் ரோகம் தீரவேணுமென்று பகவானைப் பிரார்த்திக்க ராஜனுக்கு ரோகம் நீங்கிற்று. பிறகு தனது சிஷ்யர்களுடன் திருப்பதி மலைக்குச்சென்று அலமேலுமங்கை மணவாளனுகிய ஸ்ரீநிவாசனைத் தரிசிக்கத் திருக்கோயிலுக்குச்செல்ல ஸன்னிதியில் தெரைபோடப்பட்டிருந்தது. தியாகராஜஸ்வாமி பகவானைத் தரிசிக்க முடியாமல் தனது பாபமே தெரையாக வந்து மறைக்கிறதேயொழிய வேறில்லையென்று தேரதீய கராதாவென்று பாடினர். உடனே தெரையறுந்து கீழே விழுந்துவிட்டது. பிறகு வெங்டாசலமூர்த்தியைத் தரிசனம் செய்து சேவித்துத் துதித்துத் திரும்பிவரும்போது கோவூர் சிவஸ்தலத்தில் வசித்துக்கொண்டிருந்த சுந்தரேசமுதலி யென்ற பக்தன் இவர் வரவைக்கேள்வியுற்று எதிர்கொண்டழைக்க அவ்வூரில் ஒருவாரம் வஸித்து கோவூர் சுந்தரேசுவரனை ஈவஸ–த நீவண்டி, யென்றாரம்பித்து ஐந்து கீர்த்தனங்களால் பாடினர். பிறகு அவ்வூரைவிட்டு புறப்படும் போது பக்தனுகிய சுந்தரேசமுதலி தியாகராஜஸ்வாமியின் வைராக்கியத்தையறிந்து இவர் நம்மிடத்தில் ஒன்றும் கிரகிக்கமாட்டார் என்று தீர்மானித்து இரகசியமாய் ஆயிரம் ரூபாய் நிறைந்த ஒருஜபை ஒவர் பல்லக்கிலிருக்கும் பெட்டிக்குள்வைத்து சிஷ்யர்களிடம் சங்கதியைச்சொல்லியனுப்பி விட்டான். பொழுதுவிடிய ஒரு ஜாமநேரமிருக்கும்போதே சிஷ்யர்கள் பல்லக்கைச் சுமந்துகொண்டு புறப்பட்டுவிட்டார்கள். இருபக்கமும் காடுகள் நிறைந்து பயங்கரமாயிருக்கும் மார்க்கத்தில் சென்றுகொண்டிருக்கையில் சில திருடர்கள் பல்லக்கைச்சூழ்ந்துகொண்டு சுண்டுவில்லில் சிறிய கற்களை

வைத்துப்பல்லக்கைக் குறிப்பிட்டு அடித்தார்கள். பல்லக்கைச்சுமக்கும் சிஷ்யர்களும் பல்லக்கைச் சூழ்ந்துவரும் சிஷ்யர்களும் மிகப்பயந்து ஸ்வாமி திருடர்கள் வந்துவிட்டார்கள், பயமாயிருக்கிறது, என்னசெய்வோமென்றார்கள். அதற்கு அந்தஅருமையான சத்குரு திருடர்கள்வந்தால் நமக்கென்ன பயம், நம்மிடத்தில் என்ன இருக்கிறது என்றார். அதற்கு சிஷ்யர்கள் ஸ்வாமி, கோவூர் சுந்தரேசமுதலி ஆயிரம்ரூபாய் நிறைந்த ஒரு பையை பல்லக்குப்பெட்டியில் வைத்திருக்கிறார் என்றார்கள். உடனே பல்லக்கை நிறுத்திக்கொண்டு பகவானை நினைத்து ஓகஜாரக்ஷக சீக்கிரம் எங்களை இரக்ஷிக்க வாரும் என்று முந்துவேனக, ரகுவீர, என்ற கீர்த்தனங்கள் பாடினார். அப்போது ஸ்ரீராமனும் லக்ஷ்மணனும் பயங்கரமான சேவகர்களைப்போல பல்லக்கின் இருபுறத்திலும் நின்று திருடர்கள்மேல் பாணந்தொடுத்தார்கள். பாணங்கள் திருடர்கள்மேல்விழுந்து காயப்படுத்தின. ஆனால் ஒருவரையும் கொல்லவில்லை. ஏனென்றால் மகாத்மாவான தியாகராஜஸ்வாமியின் கடாக்ஷத்துக்கு விஷயரான அவர்களைக்கொல்லுவதில் பகவானுக்கு இஷ்டமில்லை. திருடர்கள் சற்று தூரம் பின்சென்று பல்லக்கினிருபுறத்திலுமிருக்கும் சேவகசூரர்களின் அழகையும் பராக்கிரமத்தையும் பார்த்துக்கொண்டே நின்றார்கள். அப்போது சூரியபகவானும் தனது வம்சதிலகரான இராமலக்ஷ்மணர்களுக்கு பல்லக்குக் காக்கும் சிரமத்தைப் பரிகரிப்பவன்போல் கிழக்குத்திக்கில் உதயமானான். உடனே இராமலக்ஷ்மணர்கள் மறைந்துவிட்டார்கள். இவையெல்லாம் தியாகராஜஸ்வாமிக்கும் அவரது சிஷ்யர்களுக்கும் தெரியாது. பிறகு திருடர்கள் பல்லக்கினருகில் வந்து தியாகராஜஸ்வாமியை வணங்கி ஸ்வாமி நாங்கள் திருடர்கள், தங்களிடத்தில் திருடவந்தோம்

தூங்கள் பல்லக்கினிருபுறத்திலும் நின்றுகொண்டு எங்கள் மீது பாணங்களை வருஷித்துக்கொண்டு நின்ற இருவர்கள் எங்கே மறைந்தார்கள். அம்புகளினால் எங்களை காயப்படுத்தியிருந்தாலும் அவர்கள்மீது எங்களுக்கு கோபம் ஜனிக்கவில்லை. அவர்கள் அழகைப்பார்க்க மிகவும் ஆனந்தம் விர்த்தியடைந்துகொண்டிருந்தது. இச்சேவகர்களை எங்கு சம்பாதித்தீர்கள், இப்போது எவ்விடமனுப்பினீர்கள் என்று வினவினார்கள். அதுகேட்டு தியாகராஜஸ்வாமி இப்படியெல்லாம் செய்தவர் பகவானென்று நிச்சயஞ்செய்து இருகண்களிலும் நீர்பெருக திருடர்களை நோக்கி ஓ திருடர்களே! நீங்கள் பார்த்த சேவகர்களைத் தயவுசெய்து எனக்குக்காட்டுங்கள், இதோ ஆயிரம் ரூபாய் உங்களுத் தருகிறேனென்று பல்லக்கிலிருந்து பணப்பையைக் கீழேதள்ளினார். உடனே திருடர்கள் வியந்து ஸ்வாமி! சேவகர்கள் நின்றது தங்களுக்குத்தெரியாதா, ஆயிரம் ரூபாய் எங்களுக்குக் கொடுத்து அவர்களைக்காட்டச்சொல்லுகிறீர்கள், என்றுசொல்ல, தியாகராஜஸ்வாமி ஓ திருடர்களே! என் குலதெய்வங்களாகிய இராமலக்ஷ்மணர்களைக்கண்ணாரக்கண்ட உங்கள்பாக்கியமேபாக்கியம். பூர்வஜன்மத்தில் என்ன தவம் செய்திருந்தீர்களோ, உங்களுக்கு இராமலக்ஷ்மணர்கள் தரிசனம் தந்தார்கள். மகாபாவியான எனக்கு அவர்கள் காட்சி கிடைக்கவில்லை என்று கண்ணீர் ததும்ப ராமபாண, எவரிச்சிரி, வாசாமகோசர; என்ற கீர்த்தனங்கள் பாடினார். பகவத் தரிசனத்தாலும் பக்தகடாக்ஷத்தாலும் அன்றுமுதல் திருடர்கள் தங்கள் தொழிலைவிட்டுவிட்டு ஸ்ரீ ராமபக்தர்களாகி தியாகராஜஸ்வாமியைச் சரணமடைந்து, அவரது பல்லக்கைச்சுமந்துகொண்டு வனமார்க்கமாய் வந்துகொண்டிருக்கும்போது மத்தியில் ஒரு அக்கிரகாரம் காணப்பட்டது. அவ்விடத்திலிருக்கும் கோயில்

வாசலில் ஜனங்கள் கூட்டமாய் நின்றுகொண்டிருந்தார்கள். திபாகராஜஸ்வாமி சிஷ்யர்களை யழைத்து என்ன கூட்டம் விசாரியுங்கள் என்றார். அப்படியே யவர்கள்போய் விசாரித்தார்கள். ஒரு பிராமணன் கைக்குழந்தையுடைய தன் பத்தினியோடு திருப்பதி யாத்திரைக்குப்புறப்பட்டுவந்தான். காட்டுமார்கத்தில் வழிதெரியாமல் ஏங்கிக்கொண்டு வரும்போது சூரியனும் மறைந்தான். தம்பதிகள் தெய்வாதீனமாய் ராத்திரி ஒன்பதுமணிக்கு இவ்வூரைக் கண்டார்கள். புலிமுதலிய துஷ்டமிருகங்களின் உபத்திரவத்தால் ஒவ்வொரு வீட்டுக்கதவுகளும் மூடப்பட்டிருந்தன; தம்பதிகள் ஒவ்வொரு வீடாகப் போய் கதவுகளைத் தட்டிக்கூப்பிட்டும் வீட்டுக்காரர்கள் கதவுகளைத் திறக்கவில்லை. பயத்தினால் கோவிலுக்குள் போயிருப்போமென்று கோவில் கதவைப் பார்த்தார்கள். கதவுகளுக்கு உள் தாப்பாள் போடப்பட்டிருந்தது. யாத்திரைக்கார பிராமணன் தன் பத்தினியைப் பார்த்து பத்தினி, நான் இந்தக் கோயில் சுவற்றில் ஏறி உள்ளே குதித்து கதவுகளை திறக்கிறேன். பிறகு உள் சென்று கதவுகளை மூடிக்கொண்டு ராத்திரியைப் போக்கலாமென்று சொல்லி சுவற்றிலேறி உள்ளே குதித்தான். அவ்விடத்தில் ஓர் கிணறு இருந்தது. அதிலே விழுந்து இறந்துபோனான். அவன் மனைவி வெகு நேரம் கதவு திறக்கப்படாமலிருந்ததை யெண்ணி என்ன விபரீதமோ தெரியவில்லையென்று இராமுழுவதும் புலம்பிக்கொண்டிருந்தாள். பொழுது விடிந்தவுடன் ஊர் ஜனங்கள் கோயில் கதவைத் திறந்து கிணற்றில் விழுந்தவனை யெடுத்துப் பார்த்து உயிர் நீங்கியிருந்த அந்த பிரயாணியை சூழ்ந்துகொண்டு நின்றார்கள். அந்தப் பிரயாணியின் மனைவியும் தனது கணவன் மேல் விழுந்து நாதாவென்று அலறியழுதுகொண்

டிருந்தாள். இவைகளையெல்லாம் விசாரித்து சிஷ்யர்கள் குருவிடம் தெரிவித்தார்கள். தியாகராஜஸ்வாமியும் மனதிரங்கி பிரேதமாய்க் கிடக்கும் அந்தப் பிரயாணி கழுத்திலிருந்த துளசிமணி மாலையைக்கண்டு அவனை ஹரிதாஸனென்றறிந்து அவனுக்கு உயிர் அளிக்கவேண்டுமென்று ஸ்ரீராமனைப்பிரார்த்திக்க பகவான் அவனுக்கு உயிரளிக்க, அவனும் எழுந்திருந்து நடந்தவைகளையெல்லாம் தியாகராஜஸ்வாமியிடம் சொல்லிஅவர் சரணாரவிந்தங்களில் சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்து நிற்க, குருநாதரும் தம்பதிகளை யாசீர்வதித்து அனுப்பினார். தம்பதிகள் மனமகிழ்ந்து திருப்பதிக்குச் சென்றார்கள். தியாகராஜஸ்வாமியும் பஞ்சநதம் வந்து சேர்ந்தார். பல்லக்கை சுமந்துவந்த திருடர்களும் அவ்வூரிலேயே இருந்து வைராக்கியத்துடன் ஸ்ரீராமபஜனம்செய்து கொண்டு சுகமாய் வாழ்ந்திருந்தார்கள். பிறகு தியாகராஜஸ்வாமிக்கு வைகுண்டமாகிய ஸ்ரீரங்கம்சென்று ஸ்ரீரங்கநாயகி ஸமேதரா யெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ரங்கநாதனை நமஸ்கரித்து, ஓரங்கசாயீ-கருணஜூடவய்யா-ராஜுவெடலேஜூடு தாமு என்ற கீர்த்தனங்கள் பாடி அவ்விடமிருந்து மத்தியார்ஜுன க்ஷேத்திரம் சென்று, மஹாலிங்கமூர்த்தியைத் தரிசித்து, ஸ்ரீ கோவிந்தபுரத்தில் அதிஷ்டானமாகி விளங்கும் ஜகத்குரு ஸ்ரீ போதேந்திரஸ்வாமியவர்களை வணங்கி ஸ்ரீதர வேங்கடேச ஐயாவாளை மிகவும் கொண்டாடி நாகபுரி சென்று தனதிருப்பிடமாகிய பஞ்சனதக்ஷேத்திரம் வந்து சேர்ந்தார். அவ்விடத்தில் தியாகராஜஸ்வாமி வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்த ஸங்கீத மகாவித்வானாகிய அனந்தசயனம் கோவிந்ததாஸ் என்பவர் இவரைக்கண்டு வணங்கி ஓ ஸ்வாமி எனது ஸங்கீத ஸாகித்யங்களைக்கேட்டு அனுக்கிரகம் செய்யவேணுமென்று வேண்ட அப்படியே அவரது

ஸங்கீதஸாகித்யங்களைக்கேட்டு ஆனந்தித்து மிகக் கொண்டாடினார். சிலநாட் சென்றபின் காசியிலிருந்து ஓர் பக்தன் இராமேசுவரயாத்திரைக்குப் புறப்படும்போது திருவையாற்றில் எனது பக்தனாகிய தியாகராஜஸ்வாமியை தரிசனம் செய்து செல்லென்று அவனுக்கு ஸ்ரீராமன் சொப்பனத்தில் சொல்ல அவனும் அப்படியே திருவையாற்றுக்கு வந்து இவரை வணங்கி தனக்கு பகவான் சொப்பனத்தில் சொன்னவைகளைத் தெரிவிக்க தாசரதே நீரணமு, என்ற கீர்த்தனம் பாடியானந்தமடைந்தார். இப்படியநேகம் கீர்த்தனங்கள் பாடி எண்பத்தெட்டாவது வயதில் ஞானமோக்ஷகராதா, இதிஸமயமுரா, கிருபஜூடௌகுவேளரா என்ற கீர்த்தனங்களால் தனக்கு மோக்ஷமளிக்கவேண்டுமென்று மனமுருகிப் பாடினார். பகவான் ஸ்ரீராமன் பிரத்யக்ஷமாகி நீ ஸன்னியாஸம் செய்துகொள். இன்றுமுதல் ஏழாவது தினத்தில் உனக்கு எனது பதவியைத்தருகிறேனென்று சொல்லி மறைந்துபோனார். உடனே வெகு சந்தோஷத்துடன் வேதவித்துக்களாகிய அனேக புராமணோத்தமர்களும் பாகவதோத்தமர்களும் தனது சிஷ்யர்களும் நிறைந்த தனது கிரகத்தில் ஸன்னியாஸம் செய்துகொண்டு பகவான் குறிப்பிட்ட ஏழாவது நாளாகிய கலியுகம் 4948-பராபவஹுபுஷ்யபகுளபஞ்சமி திதியில் பிரம்மஸ்வரூபமாகி விளங்க சிரஸிலிருந்து ஒரு அற்புதமான ஜோதி புறப்பட்டு ஆகாசமார்க்கத்தில் செல்ல சகல ஜனங்களும் பார்த்து ஆச்சரியமடைந்தார்கள். ஆகாயத்திலிருந்து புஷ்பமாரி உண்டாயின. கந்தர்வர்களையொத்த சிஷ்யர்கள் ஸ்ரீராமபஜனம் செய்தார்கள். எங்கும் மகோற்சவம் கொண்டாடினார்கள். உடனே தியாகராஜஸ்வாமிக்கு ஸன்னியாஸ விதிப்படி காவிரிக்கரையோரத்தில் ஸமாதியமைத்தார்கள். மகாபிஷேகம் நடத்தி பிருந்தாவனம் கட்டினார்கள்.

ஜெகந்நாத மகாகவி

இப்பாரதநாட்டை மகம்மதியர்கள் ஆண்டுவந்தனர். மகா பண்டிதனுயிருந்தாலும் அவன் சக்ரவர்த்தியை ஆச்ர யிக்க வேண்டும். ஜெகந்நாத மகாகவி என்றவிப்ரச்ரேஷ் டர் பிரவஸித்தனுன மொகல் பாதுஷா ஷஹாஜிஹானே ஆசரயித்திருந்தார். மதவிசாரத்தில் இப்பொழுதுள்ள சாந் தத்தை அக்காலம் பெற்றிருக்கவில்லை. ஆரியர் மிலேச்சர்க ளால் துச்சமாய் நினைக்கப்பட்டிருந்தனர். ஷஹாஜிஹான் ஜெகந்நாத பண்டிதரிடம் அதிக பிரியம் வைத்திருந்தான். கவியைப் பார்த்தவுடன் சக்ரவர்த்தியின் ஹிருதய கமலம் ஆநந்தத்தால் மலரும். மகா கவியின் மிருதுவசனத்தில் அரசன் மனம் கரைந்துவிடும். மதவிஷயமான தர்க்கத்தி லும், ஸித்தாந்தத்திலும், கவியின் வார்த்தைகளே மண்ட லேஸ்வரனுக்கு திருப்தியைத் தந்து கொண்டிருந்தன. பா மினீ விலாஸாதி காவியம் லக்ஷ்மிலஹரீரச கங்காதநாத்ய லங்கார கிரந்தங்களை மிருதுமதுர வசனங்களாலும் இனிய திராக்ஷாபாகைப்போலும் இயற்றி ரஸிகஜன மனேரஞ்சக மாய் விளங்கச்செய்தவர் இந்தமஹா ஜெகந்நாத கவியே. தமது அத்புத பாண்டித்ய பிரதர்சனுர்த்தமாய் ஸித்தாந்த கௌமுதியின் மனேரமையென்னும் வியாகரணத்தை வெகு வாய்க் கண்டித்திருக்கிறுர். இப்பொழுதும் அந்த கண்டனம் மனேரமாகுசமர்த்தனம் என்றபெயருடன் கியாதி பெற்று வையாகரணிகளுக்கு விரத்வத்தை விளக்கிறது. இவர் ஸாமான்யபண்டிதரன்று. அத்வைத ரஸிகசிகாமணி ரஸி கத்துக்குத்தக்க யௌவனம், யௌவனத்துக்கேற்ற ஸௌந்த ம், ஸௌந்தரத்துக் கிசைந்த ஸம்பத்து, ஸம்பத்துக் தகுந்த

விநயம், விநயத்துக்கேற்ற மதாசரணம். இவைகள் இந்தமஹா ஜெகந்நாத பண்டிதரிடம் குடிகொண்டிருந்தன.

ஒருநாள் மகாசபைகூடிற்று. மயூராஸனத்தின் மேல் சக்கரவர்த்தி உல்லாஸமாய் விற்றிருந்தார். பண்டித மணியும் ஸபையை அலங்கரித்தார். ஷஹாஜிஹான் பண்டிதரைப் பார்த்து கலாஸாகரமே! ஈசனுடைய பிரியம் ஜாதியிலிருக்கிறதா? நம்பிக்கையிலுள்ளதா? என்று கேள்வி கேட்டான். நம்பிக்கையைவிட்டு வெளிவேஷத்திலில்லை யென்று பண்டிதர் கூறினர். சில தினங்களாயின. பண்டிதரை சக்கிரவர்த்தி தன் வசப்படுத்த ஆலோசனை செய்தான். அதிரூபவதியான தனது குமாரியைப் பண்டிதருக்கு மனையாளாக்குவதே உசிதமென்று எண்ணினன். அதிகநாள் தாமதிக்கவில்லை. ராஜாஞ்ஞை பலமானது. பண்டிதர் யோசித்தார்; எவ்வன சுந்தரியை பரிக்கிரகிக்க வேண்டியதாயிற்று. சக்கரவர்த்தியின் ஸந்தோஷத்துக்கு எல்லையில்லை. வித்வன் மணியை அன்றுமுதல் நிச்சயமான ஞானியென்று பாவித்துக் பக்தியுடன் பிரீதிசெய்தான்.

தெலுங்கு பிராம்மணரான பண்டிதர் மிலேச்ச கன்யையை அங்கீகரித்ததினம் முதல் மற்ற விப்ரர்களால் பஹிஷ்கரிக்கப்பட்டார். ஷஹாஜிஹான் இதைக்கேட்டு பிராம்மணர்களை, பஸ்மீகாரம் செய்ய நினைத்தான். பண்டிதன் உபதேசத்தால் துஷ்கிருத்யம் நடக்கவில்லை. அவருடன் விப்ரர்கள் சாப்பிடமாட்டேனென்றனர். பந்துக்களிலிருந்து நீக்கப்பட்டார். பரஸ்பர ஸம்பாஷணைகிடையாது. அவருடைய பாண்டித்யத்தைக்கண்டிக்கலாயினர்.

ஓர் பர்வகாலத்தில் பாரதேயர் கங்கையில் நீராட வந்தனர். ஜெகன்னாத பண்டிதரும் ஸ்நானம் செய்ய பிராம்மணர்

கள் நீராடும் துறையிலிரங்கினர். அவர் கங்கையைத் தொடக்கூடா தென்று பிராம்மணர் கலகம் செய்தார்கள். அத்துடன் விடாமல் பண்டிதரை நிந்திக்கலாயினர். தாழ்மையோடு பிராம்மண ஸமூகத்தைப் பிரார்த்தனை செய்தார். கவிகுல சிரோமணியினுடைய ஸ்துத்யத்தையாரும் அங்கீகரிக்கவில்லை. அவரும் மௌனமாகக் கரையேறி அங்கிருந்தே பாகீரதியை ஸ்தோத்திரம் செய்தார். அந்தப் பிரார்த்தனையே கங்காலஹரி என்ற ஸ்துதி கிரந்தமாய் பிரசித்தி யடைந்தது. ஆஹா! என்ன ஆச்சர்யம்! கங்காதேவி ஜலம்படிப் படியாய் மேலே வரலாயிற்று. பண்டிதர் நின்றிருந்தவிடத்தில் கங்காலம் மோதின. அவருடைய ஸ்நானமும் கங்கையில் அங்கேயே முடிந்தது. சில நேரத்துக்குள் கங்கை முன்போல் கீழ்ப்படியில் ஓடுகிறது. இதை விப்பர சிரோமணிகள் பரமாச்சரியங்கொண்டனர். கங்கையால் பவிகரனென்று மதிக்கப்பட்ட ஜெகந்நாத பண்டிதருக்குத் தங்கள் பகிஷ்காரத்தால் வந்தகெடுதி யென்ன? என்று வெட்க மடைந்தார்கள். பண்டிதரை பூஸுரர்கள் பிராணயாமம் செய்து ஸ்துதித்தும் மன்னிப்புக் கேட்டனர். மகாகவி கோபமென்பதில்லாமல் சாந்தசீலராய் எல்லோருக்கும் ஞானோபதேசம் செய்தார். அன்றுமுதல் வரகவி யென்ற நாமமும் அவருக்குண்டாயிற்று ஜாதி மத கர்வங்கள் வீணென்றும் உண்மைகளான அந்தரங்கபக்தியே சிரேஷ்டமென்றும் நிஷ்கரித்தார்கள்.

இத்தியாதி மஹாத்துமாக்களின் மகிமைகள் ஜகத்பிரஸித்தமாய் இன்னும் விளங்கி வருகின்றது. பூர்வமுள்ள மஹான்கள் தம் வாழ்நாட்களில் இக்கலியினில் பகவத்பக்தியே ஸர்வஸாம்பிராஜ்யமென நம்பி அதையே வைராக்கியமாக கடைபிடித்து ஒழுகிவந்தார்கள். தற்காலம் இப்பேர்க்கொற்ற மஹாத்துமாக்களின் ஞாபக சின்னங்கள் இன்னும் இருந்து வருகின்றது.